www.eelamview.com













**விடுதலைப்புலிகள்**




குரல்: 132 | ஆவணி - புரட்டாதி, 2006 | அன்பளிப்பு: 12/=

# தமிழர் தாயகமெங்கும் படையினரின் அராஜகம்

**இனவெறிபிடித்தலையும் மகிந்த ராஜபக்ஷவின் கொலைவெறிக்கு, ஒவ்வொரு நாளும் ஐந்து - பத்து என தமிழர்கள் பலியாகிவருகின்றனர். சிங்களப் படைகளின் கட்டுப் பாட்டிலுள்ள தமிழர் தாயகப் பகுதியெங்கும் இந்தக் கொலைச்செயல்களைச் சிங்களப் படைகள் நடாத்திவருகின்றன.**

தினம் தினம் நடாத்தப்படும் இந்தத் தமிழர் படுகொலை மகிந்த அரசின் உத்தரவின் பேரில்தான் நடாத்தப்படுகின்றது என்று மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் இவ்விதம் அறுநூறு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படையினரால் கடத்தப்பட்டுக் காணாமற்போயுள்ளனர். கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டவர்கள் பெரும் சித்திரவதைக்குப் பின்னரே கொல்லப்பட்டுள்ளனர். வீசியெறியப்பட்டுக் கிடந்த அவர்களின் உடலங்களில் கோரச் சித்திரவதைக்கான தடயங்கள் உள்ளன.

இந்தப் படுகொலைகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படி கண்காணிப்புக்குழு - இணைத் தலைமை நாடுகள் உட்பட சர்வதேச அமைப்புக்கள் மகிந்த அரசைக் கேட்டிருந்தன.

எனினும், தமிழர் கொலைகள் தொடர்ந்தபடியே உள்ளன.

தனியொருவனது கொலையையே பொறுக்க விரும்பாத இந்த 21ஆம் நூற்றாண்டின் உலகம், தினம் தினம் கொத்துக்கொத்தாகத் தமிழர்கள் படுகொலை செய்யப் படுவதைக் கண்டு சும்மாயிருப்பது தமிழர்களை வேதனைக் குள்ளாக்கியுள்ளது.

சாதாரண விவசாய இளைஞர்களும் படையினரால் கொல்லப்படுகின்றனர். சர்வதேச தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் இளைஞர்களும் கொல்லப்படுகின்றனர்.

கொல்லப்பட்டவர்களின் மரண நிகழ்வுகள் எப்படி நடைபெறவேண்டும் - எவ்வளவு நேரத்திற்குள் நடைபெற வேண்டும் - எத்தனை ஆட்களுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதைச் சிங்களப் படையினரே தீர்மானித்து குடும்பத்தினர் மீது திணிக்கின்றனர்.

இந்தக் கொலைத் தாக்குதல்களில் இருந்து தப்பி யோடிப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வர மக்கள் துடிக்கின்றனர். ஆனால் பாதைகளை மூடி - போக்கு வரத்தைத் தடைசெய்து மக்களின் உயிர்காக்கும் இறுதி முயற்சியையும் படையினர் தடைசெய்கின்றனர்.

இதனால் மாற்றுவழிகள் ஏதுமில்லாமல் படையினரின் கொலைவலயத்திற்குள் வாழத் தமிழர்கள் நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் வாழும் தமிழர்களும் இதே தலைவிதியையே தாங்கிநிற்கின்றனர். கும்பல் கும்பலாகக் கைதுசெய்யப்படுவதும் - கடத்தப்படுவதும் - சித்திரவதை செய்யப்படுவதும் - காணாமற்போவதும் தென்பகுதிவாழ் தமிழர்களின் நிலையாகிவிட்டது. கொழும்பு - கண்டி - குரு நாகல்... என எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படுகின்றனர்.

படையினர் - பொலிசாருடன் இணைந்து சிங்களக் காடையர்களும் தமிழர்கள் மீது அராஜகம் புரிகின்றனர். சிங்கள அரசின் ஆசீர்வாதத்துடன் நடக்கும் தமிழர் களுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பதால் படையினர் - காடையர் என்று எந்த வித்தியாசமும் இல்லாது தமிழரைக் கொடுமைப்படுத்தும் செயல்கள் நடக்கின்றன.

தமிழர்கள் கொல்லப்படுவதுபோல முஸ்லிம்கள் மீதும் சிங்கள இனவெறி பாய்ந்துவருகின்றது. பொத்துவிலில் 11 முஸ்லிம்கள் சிறப்பு அதிரடிப்படையினரால் வெட்டிக்கொல்லப்பட்டதும் - அந்தப் படுகொலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய முஸ்லிம் மக்கள்மீது அதிரடிப்படையினர் சுட்டு நடவடிக்கை எடுத்ததும் சிங்கள அரசின், தமிழ் - முஸ்லிம் விரோத குணத்தையே காட்டு கின்றது.

படையினருக்கான உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இலட்சக்கணக்கான தமிழர்களை அவர் களின் வீடுகளிலிருந்து சிங்களப் படைகள் விரட்டியடித் தன.

இராணுவநடவடிக்கைகள் என்ற பெயரில் இலட்சக் கணக்கான தமிழர்களைச் சிங்களப் படைகள் இடம்பெயர்ந் தோட வைத்துள்ளன.

கிபிர் தாக்குதல் - ஆட்லறித் தாக்குதல் மற்றும் கொலைத்தாக்குதல்கள் என்று ஒருசில வாரங்களில் மட்டும் நூற்றுக்கணக்கான தமிழர்களைக் கொன்றொழித்துள்ளது. தொடர்ந்தும் படுகொலைகளில் சளைக்காமல் ஈடுபடுகின்றது.

இதேவேளை, தமிழர்கள் மீது உணவு - மருத்துவத் தடைகளை அமுல்படுத்தி துன்பப்பட்டோரை மேலும் வாட்டி யெடுக்கும் இரக்கமற்ற கொடூரச்செயல்களைச் சிங்கள அரசு செய்கின்றது.

படையினரின் கொலைவலயங்களிலிருந்து தப்பி யோடக்கூடிய வழிகளை அடைத்து மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தவும் படையினர் முயற்சிக்கின்றனர்.

இவையெல்லாம் பாரிய இன அழிப்பொன்றிற்கான முன்னேற்பாடுகள் என்பதில் ஐயமில்லை. தமிழினத்தை ஒரு பாரிய இன அழிப்பிற்குள்ளாக்கி - போராட்டத்தை நசுக்க மகிந்த ராஜபக்ஷ திட்டம் தீட்டியுள்ளார்.

இந்தக் கொலைவெறித் திட்டத்தை முறியடிக்க ஓர் வழியுண்டு. தமிழ் இளைஞர் - யுவதிகள் புலிவீரர்களாகி எமது மண்ணையும் மக்களையும் மீட்டெடுக்க முன்வர வேண்டும்.

அநியாயமாகச் சாவதா! அல்லது போராடி எமது இனத்தைப் பாதுகாப்பதா! என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் தமிழினத்தின் இளம் பரம்பரை உள்ளது.




www.eelamview.com

www.eelamview.com



# மகிந்த அரசின் இராணுவக் கொள்கை

போர்மூலம் புலிகளைத் தோற்கடித்து - தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து தமிழ்மக்களைச் சரணாகதி நிலைக்குள்ளாக்குவதே சிங்களப் பேரினவாதிகளின் நீண்டகாலக் கனவாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசிலிருந்து பிரேமதாசா மற்றும் சந்திரிக்கா அம்மையார் வரை இத்தகையதொரு இராணுவக் கனவுடனேயே அவர்கள் ஆட்சிக்கதிரைகளில் வீற்றிருந்தனர்.

இப்போது, மகிந்த ராஜபக்ஷ அவர்களும் இந்த மகாவம்சக் கனவுடனேயே ஆட்சிக் கடிவாளத்தைப் பிடித்தபடியுள்ளார்.

தமிழ்மக்களுக்கு எதிராக இந்த ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக நடாத்திய ஆக்கிரமிப்புப் போர்கள் சிங்களத்திற்கு வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

ஆயினும், சிங்கள ஆட்சியாளர்கள் இந்த இராணுவக் கனவைக் கைவிட இன்றுவரை தயாராகவில்லை. இவர்களது இராணுவவாதப் போக்கிற்குள் சிக்கிப் பல்லாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்காகத் தமிழ்மக்கள் அகதிகளாகி - அல்லலுறுகின்றனர்.

இதேசமயம், சிங்கள ஆட்சியாளர்களின் இராணுவ அணுகுமுறைகளுக்கு அமைவாகப் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழ் - சிங்கள மக்களின் இந்தச் சாவுகளை - அவலங்களை நிரந்தரமாக நிறுத்தும் இலக்குடன் இரு தரப்பும் சமாதானப் பேச்சுக்கள் வாயிலாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண முன்வரவேண்டுமென்று சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகக் கோரிவந்தது.

சர்வதேச அக்கறை மற்றும் அழுத்தங்கள் காரணமாக ஒரு போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் இத்தகையதொரு செயற்திறமை மிக்க உடன்பாடு முன்னர் எப்போதுமே எட்டப்பட்டிருக்கவில்லை.

இந்த அரசியல் - இராணுவ உடன்பாட்டின் நடைமுறைகளைக் கண்காணித்து - ஒரு நிரந்தர சமாதான ஒப்பந்தம் வரை இரு தரப்பையும் நகர்த்திவிட ஒரு சர்வதேச கண்காணிப்புக் குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது.

இராணுவச் சமநிலை - மற்றும் இரு பகுதியினருக்கும் என வரையறுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நிலங்கள், அத்துடன் உடன்பாட்டை நிராகரிப்பதாக இருந்தால்கூட அதற்கான சர்வதேச நிபந்தனைகள்... என்று முழுமையான நடைமுறை வடிவத்துடன் போர்நிறுத்த உடன்பாடு இருந்தது.

ஆயினும், மகிந்த அரசு இப்போது எல்லாவற்றையுமே போட்டுடைத்து ஒருபெரும் போருக்கான புறச்சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத்தீவை மீண்டும் இரத்தம் சிந்தும் கண்ணீர்த் தீவாக மாற்றுவதில் மகிந்த அரசு விடாப்பிடியாக உள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டையோ! அதைக் கண்காணித்த போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவையோ மகிந்த அரசு மதிக்கவில்லை.

பேச்சுவார்த்தையின் மத்தியத்துவராகச் செயற்படும் நோர்வே அரசை மீண்டும் மீண்டும் சீண்டி அவமானப்படுத்துவதிலேயே சிங்கள ஊடகங்கள் கவனம் செலுத்துகின்றன. இந்த நோர்வே எதிர்ப்புப் பிரச்சாரத்தின் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவும் - ஜே.வி.பியினரும் உள்ளனர் என்பது உலகறிந்த உண்மை.

"போர்நிறுத்த உடன்பாடு கிழித்தெறியப்பட வேண்டும்", "நோர்வே வெளியேற்றப்பட வேண்டும்" என்ற சமாதான விரோத இனவாதக் கூச்சல்களுடன் புலிகள் இயக்கத்தையும் மகிந்த அரசு சீண்டிவந்தது. போர்நிறுத்த மீறல்களிலும் மோசமாக ஈடுபட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்போது, உடன்பாட்டு விதிகளின் உச்ச எல்லைகளை மீறும் வகையில் மகிந்த அரசு தமிழ்மக்கள் மீது ஒருபெரும் போரைத் திணித்துள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சில நிலப்பகுதிகளைக் கைப்பற்றி - அங்கிருந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை இடம்பெயர்ந்தோடச் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் முகமாலை - நாகர்கோயில் முன்னரங்க நிலைகளில் சிங்களப் படைகள் நாள்தோறும் வலிந்த தாக்குதல்களை நடாத்துகின்றன.

வன்னியின் வான்பரப்பினுள் ஒவ்வொரு நாளும் நுழையும் சிங்கள வான்படையின் கிபிர் விமானங்கள் கண்டபடி குண்டுத் தாக்குதல்களை நடாத்துகின்றன.

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் போர்நிறுத்த உடன்பாட்டையும் நிராகரிக்கவில்லை, கண்காணிப்புக் குழுவையும் கைவிடவில்லை, நோர்வேயையும் வெளியேற்றவில்லை. சமாதானத்தின் சாட்சிகளான இவற்றையும் வைத்துக்கொண்டு தமிழ்மக்கள் மீது ஒருபெரும் மரபுப்போரையும் மகிந்த ராஜபக்ஷ திணித்துள்ளார்.

சிங்கள மக்களிடம் இந்தப்போரை எடுத்துச்சொல்லித் தனது போர்க்கொள்கைக்கு ஆதரவாக சிங்கள தேசத்தை அணிதிரட்ட மகிந்த அரசு முயற்சிக்கின்றது.

படையினர் கைப்பற்றிய நிலங்களைப் படம் பிடித்து அதை வெற்றிச்செய்தியாகக் காட்டி - சிங்களவரிடம் "போர்க் காய்ச்சலை" ஏற்படுத்த சிங்கள அரசு முனைகின்றது.

சம்பூர்ப் பகுதியைப் படையினர் கைப்பற்றியதற்காக மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கொழும்பில் கேக் வெட்டி வெற்றி விழாக் கொண்டாடியுள்ளார்.

இதைப்போன்று இனவாத வெற்றி விழாக்களை முன்னைய சிங்களத் தலைவர்களும் கொண்டாடியிருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழரைப் போர்மூலம் வெல்ல ஆசைப்படும் இராணுவவாத நோக்கமே இந்த வெற்றிவிழாக் கொண்டாடல் என்ற சிந்தனையின் ஊற்றுமூலமாக உள்ளது.


மகிந்த அரசானது, அதன் தற்போதைய இராணுவவாத அணுகுமுறையைக் கைவிட்டு - போர்நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்தும் வகையில் புலிகளுடன் சமாதானப் பேச்சில் ஈடுபடவேண்டும் என்று நோர்வே உட்பட மேற்கு நாடுகள் கோருகின்றன. இதையே சர்வதேச சமூகமும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

எனினும் இந்தச் சர்வதேச அபிப்பிராயத்தை மதித்து நடக்கும் வகையில் மகிந்த அரசு செயற்பட மறுக்கின்றது. போரை மேன்மேலும் தீவிரமாக்குவதிலேயே சிங்களப் படைகள் கண்ணும் கருத்துமாக உள்ளன.

இந்த நிலையில் நோர்வே அரசும் - இணைத்தலைமை நாடுகளும் விரும்பும் வகையில் சமாதானப் பாதைக்கு மீண்டுவர மகிந்த அரசு விரும்புமா! என்பது கேள்விக்குறியேயாகும்.

புலிகள் இயகத்தைப் பொறுத்தவகையில் போர்நிறுத்த உடன்பாடு அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்கின்றது. அதை முழுமையாக அமுல்படுத்துவதைப் பற்றிப் பேசவும் புலிகள் தயாராக உள்ளனர்.

ஆயினும் சிங்களப் படைகள் ஆக்கிரமிப்புப்போரை நடாத்தித் தமிழர் தாயகத்தைச் சிதைப்பதிலும் தமிழ்மக்களைப் பெரும் அவலத்திற்குள் தள்ளி தமிழர்களை அழிப்பதிலேயுமே வெறிகொண்டு நிற்கின்றது. இந்நிலைமையானது தமிழ்மக்களை முழு அளவிலான போருக்குள் தள்ளி இலங்கைத்தீவையே யுத்தகளமாக்க முனைந்து நிற்கின்றது.



# பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்

திலீபனிற்கு
தீபம் ஏற்றுவோரே
பார்த்தீபனின்
பாதம் தொழுவோரே
ஈகச் சிகரத்திற்கு
மாலை தொடுப்போரே
அதிசய வள்ளலுக்காய்
கசிகின்ற நெஞ்சோரே
மனதிலேற்றுங்கள்...
எங்கள்
பார்த்தீபன்
இப்போதும்
பசியோடுதான் இருக்கிறான்

சிறுகச் சிறுகச் சேர்த்து
நிமிரக் கட்டிய மனையும்
உயிரைப் பிரியும் பொழுதில்
தந்தை
உயிலாய்த் தந்த வளவும்
இன்பம்
பெருகப் பெருக நாங்கள்
ஓடித்திரிந்த தெருவும்
உள்ளம்
உருக உருகக் கண்ணீர்
விட்டுப்பிரிந்த ஊரும்
திரும்பக் கிடைக்கும்
காலம் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

நாளும் பொழுதும்
கண்ணைக் கரைத்து
நாளை வருவார்
நாளை வருவார்
என்றே தங்கள்
இதயம் வதைத்து
கொலைஞர் பிடித்த
உறவை நினைத்துக்
கதறும் மனங்கள்
இருக்கும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

சதியும் வெறியும்
ஒன்றாய்க் கலந்து
கருணை கனிமை
எதுவும் மறந்து
எங்கோ பிறந்து
மனிதம் துறந்து
எங்கள் மண்ணில்
மரணம் விதைத்து
துயரச் சுமையுள்
எம்மைத் திணிக்கும்
கொடுமைப் படைகள்
எரியும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

உயிரை உடலை
உறவைத் துறந்து
உணர்வு முழுதும்
தமிழைக் கலந்து
விடியும் காலைக்
கதிராய் விரிந்து
தமிழர் தேசக்
கனவை வரித்து
மண்ணின் மானம்
பெரிதாய் மதித்து
மண்ணுள் உறங்கும்
மாந்தர் கேட்கும்
விடுதலை வந்து
சேரும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

சொந்த சுகங்கள்
அனைத்தும் துறந்து
துணிவுச் சிறகை
மனதில் அணிந்து
தலைவன் திசையில்
பயணம் தொடர்ந்து
அணியாய்த் திரளும்
தமிழர் படையின்
எழுச்சித் தீபம்
எரியும் வரைக்கும்,
மக்கள் புரட்சி
மண்ணில் வெடித்து
தமிழர் முழுதும்
புலியாய் விரைந்து
தாயகமெங்கும்
போரிடும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

- செந்தோழன் -

திசைகள் எதிலும்
பகையை முடித்து
நிலங்கள் முழுதும்
விரைவில் பிடித்துப்
புலியின் கொடியைக்
கரத்தில் எடுத்து
வெல்லும் சேதி
சொல்லும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

ஆகவே...
பசித்த வயிற்றோடு
பாடையேறிய
எங்கள்
பார்த்தீபன் கனவுகள்
மேடையேறி முழங்கவல்ல
தீபமேற்றி வணங்கவல்ல,
களத்திலேறிப் பகைமுடிக்க
நெருப்பிலேறிக்
கொடிபிடிக்க
தீர்வெடுங்கள்
திலீபனிற்குத் தேவையான
உணவை
உங்களால்தான்
சமைக்க முடியும்.

www.eelamview.com



# தொங்குநிலை மகிந்தரும் தாங்குநிலைத் தமிழரும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய பரிமாணமாக பரிணாம அரசியல் போக்கின் விளைவாக அரங்கேறிய போர் நிறுத்த + அமைதிப்பேச்சுக் காலகட்டம் தனது வேலையை முடுக்கிவிட்டுள்ளது. இதன் உரிய உச்ச விளைவுகளுக்கு எம் மக்கள் இப்போது முகம் கொடுக்கின்றனர். அதியுச்ச குழப்பமே இக்கட்டத்தின் இயல்பு. பல்வேறு நிலைகளாக நிகழ்ச்சித் திட்டங்களாக இக் குழப்ப மயக்க நிலை மக்கள்முன் விரிகின்றது. விடுதலையை அல்லது மாற்றத்தினைத் தடுக்க முனையும் அனைவருக்கும் வரலாறு வழங்கும் இறுதி வாய்ப்பேயிது. எனவே மகிந்தர் மட்டுமல்ல, பிராந்திய சருவதேச சக்திகள் அனைத்துமே ஆலாகப் பறந்து பரபரப்பாகச் செயற்படும் காலமிது. போர்நிறுத்தம் இருக்க போர் நடக்கும் நிலை; போர் நிறுத்தத்தினைக் கண்காணிப்போர் போரைக் கண்காணிக்கும் நிலை; போர்க்காலம் போலவே அமைதிக் காலத்திலும் அழிவுத் தீயில் மக்கள் கருகும் நிலை. என பரவலாக விரியும் இந்நிலை விடுதலைக்குப் போராடுவோரிடம் எதிர்பார்ப்பது அவதானம்; தெளிவு; விவேகம்; நுண் உணர்திறன் என்பனவே.

பத்துத்தலை இராவணன் போல பத்துமுகம் உலகிற்குக் காட்டித் தனது உண்மை முகத்தினை மறைக்க மகிந்தர் எடுக்கும் முயற்சிகள் கூர்மையாக அவதானிக்கப்பட வேண்டியவை. காலம் காலமாகச் சிங்களத் தலைமைகள் சுமந்துவந்த ‘‘திருப்பணியை முடித்துவைக்கத் தன்னாலான பணியைச் செய்ய மகிந்தர் முனைகின்றார். மகிந்தருக்குள்ளே மறைந்திருப்போர் யாரென்று பாருங்கள்... தாய்நிலத்தினைப் பறித்த டி.எஸ், உடன்பாடென உடன்படவைத்து ஏமாற்றிய பண்டா, இராணுவத்தை ஏவிய சிறிமா, குள்ளநரித்தனம் செய்து கருவறுக்க முயன்ற ஜே.ஆர், சிரித்தே கொன்ற பிறேமா, ஆயிரம்தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி சந்திரிக்கா என எல்லாரையும் உள்வாங்கிய சிங்கள வெறியனாக மகிந்தர் உலாவருகிறார். ‘‘நாக்கில் நறும் தேனும் நெஞ்சில் நீக்கரிய நஞ்சும் கொண்ட’’ சிங்களத் தலைமைகளில் தனியிடம் பெறும் மகிந்தர் செஞ்சோலை வளாகக் கொன்றொழிப்பின் பின் செய்தியாளரிடம் கூறினார். **‘‘என்னுடைய வான்படை நினைத்திருந்தால் மருத்துவமனைகளுக்குக் காயமுற்றோரைக் காவிச்சென்ற வாகனங்கள்மீது குண்டுவீசித் தாக்கியிருக்க முடியும். ஆனால் பெரும்தன்மை காரணமாக அவ்விதம் செய்யவில்லை.’’**

இருமுகம் காட்டும் சிங்களத் தலைமைகளைத்தான் இதுவரை உலகமும், எம் மக்களும் கண்டிருக்கின்றார்கள். ஆனால் ஒரேவேளையில் பலமுகம் காட்டும் மகிந்தர் எதிர்பாராத திருப்பங்களையெல்லாம் எல்லாருடைய நிகழ்ச்சி நிரல்களிலும் ஏற்படுத்துகின்றார். **இனவெறியின் தீவிரத் தன்மையை வெளிப்படுத்த விமல் வீரவன்ச முகம், இணக்கப்பாட்டிற்கும் சமரசத்திற்கும் சகோதரர் பசிலின் முகம், இராசதந்திர மொழியில் மாய்மாலம் பண்ண பாலிதவின் முகம், இராணுவத் தீர்வைக் காணும் கடும்போக்குக்கு சரத் பொன்சேகா முகம் இவை யாவற்றினையும் விட எப்போதும் சிந்தனையிலும், கவலைப்படுவது போலவும் தோற்றமளிக்கும் காட்சியோடு கையில் மலர்த் தட்டோடு பன்சலவிற்கு செல்லும் பதவிசான மகிந்தரின் சொந்தமுகம். இப் பல முகங்களுக்குள் ஒளிந்திருக்கின்றது மகிந்தரின் உண்மையான கோரமுகம்**. இக் கோரமுகம் படிப்படியாக வெளிப்படுவதால் இத் தீவில் பீறிட்டுப் பாய்வது தமிழர் குருதி. தென்னாசியப் பிராந்திய ஒழுங்கிலும், சருவதேச ஒழுங்கிலும் மகிந்தர் ஏற்படுத்தும் தாக்கங்கள் விளைவிப்பது புதிய நெருக்கடி. சருவதேச ஒழுங்கின் உலக மயமாக்கல் பொருண்மிய நிலையின் காவலர்களான மேற்குலகிற்கோ தமது நீண்டகால நட்பு நாடொன்றினை எவ்விதம் கையாள்வதென்கிற இக்கட்டு. இந்தியாவிற்கோ எதிர்பாராத அதிர்ச்சி: இப் பிராந்தியத்தில் தனது உண்மை நண்பன் யார் என்பதை மீளாய்வு செய்யும் நெருக்கடிநிலை. இவ்வாறாகத் தனது செயற்பாடுகளால் மிகக் குறுகிய காலத்திற்குள்ளே மகிந்தர் தோற்றுவித்திருப்பது எத்தகைய நிலையென்பதை சண்டேரைம்சின் நடுப்பக்கக் கட்டுரையாளர் சுரணிமால மதிப்பிடுகிறார். ‘தற்போதைய நிலை மிகப் பயங்கரமான கதைகளை உலகமெங்கும் உருவாக்கி விடுகின்றது. முதலீட்டாளர் பதுங்கி மறைவிடங்களில் நிலையெடுக்கின்றனர். எவ்வளவுதான் பூசி மெழுகினாலும் சிறிலங்கா ஒரு பெரும் போரில் சிக்கியிருப்பதை மறைக்க முடியவில்லை. **இவையாவும் சிறிலங்காவை ஒரு மினி றுவாண்டாவாக மாற்றிவிட்டது.**


மகிந்தரின் பகுத்தறிவற்ற இம் மூடப் போக்கின் மூன்று பாரிய விளைவுகள் இத் தீவில் பாரிய மாற்றங்களை மிக விரைவில் ஏற்படுத்தும் என்பது சகலராலும் உணரப்படுகின்ற விடயம். பல நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டும் இலட்சக் கணக்கில் இடம் பெயர்ந்தும் பொருண்மிய முற்றுகை நெருக்கடிக்குள்ளும் வாழும் எம் மக்கள் தாம் எதிர்நோக்கும் மிகப்பாரிய போர் நெருக்கடிக்கு முகம்கொடுப்பது பற்றிச் சிந்திக்கும் **வேளையிது.** கட்டுமீறிச் செல்லும் சிறிலங்காவின் நிலையை எவ்விதம் கையாளவேண்டுமென்கிற இறுதி முடிவினைச் சருவதேசம் எடுக்க வேண்டிய **வேளையிது.** பிராந்திய மேலாளராகவும் பெரிய அண்ணனாகவும் கருதிச் செயற்பட்ட இந்தியாவிற்கோ (எது நடக்கக் கூடாதென்பதற்காக ஈழத் தமிழரைப் பலிக்கடாவாக்கும்’’ கொள்கையினைக் கடைப்பிடித்ததோ அது பயனற்றதாகிய நிலையில்) தனது தென்முனை பாதுகாப்பற்றதாக ஒரு கொதிநிலை நோக்கி நகர்வதைத் **தடுக்கும் வேளை இது.**

முதலில் சருவதேசத்தின் கதையை நோக்கலாம். கடந்த ஓகஸ்ட்மாதம் முழுவதுமே சருவதேசம் மிகக் கடுமையான தொனியில் தனது அதிருப்தியைக் காட்டிய காலமாகின்றது. நோர்வே மிகத் தெளிவாகப் பல வழிகளிலும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. நோர்வேயின் அமைதித் தூதரின் தூதரான ஹான்சன் போவர் யப்பானியப் பிரதிநிதி அகாசியைத் தொடர்புகொண்டு புலிகளைத் தடைசெய்யும் யப்பானின் முடிவை இக்கட்டத்தில் நடைமுறையிலிடுவது பொருத்தமற்றது என வலியுறுத்தியதாகச் செய்திகள் வெளியாகின. ஓகஸ்ட் 23ஆம் திகதி வழமைக்கு மாறான ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஏனோதானோவென்று செயற்பட்டதாகக் கூறப்படும் இந்தியா தனது வெளிவிவகாரச் செயலர் சியாம் சரணை ஒஸ்லோவிற்கு அனுப்பியது. தனது பெருத்த கவலையை அங்கு பகிர்ந்துகொண்டதாம். அடுத்து என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் விவாதித்ததாம்.

அமெரிக்காவின் தென்னாசிய, மத்திய ஆசியப் பகுதி உதவிச் செயலர் ஸ்ரீம் மான் அவசரமாகக் கொழும்பிற்கு பறந்துவந்து பொறுப்புள்ள அரசாங்கமென்கிற வகையில் எவ்விதம் மகிந்தர் இயங்கவேண்டுமென பாடமெடுத்தாராம். ஓகஸ்ட் 16ஆம் திகதி கோபி அனான் தொலைபேசியில் மகிந்தரோடு தொடர்பை ஏற்படுத்தி 25 நிமிடங்களுக்குத் தனது கரிசனையை, கவலையை பகிர்ந்து கொண்டார். சருவதேச செஞ்சிலுவை, கொழும்பிலுள்ள இராசதந்திரிகள், இணைத் தலைமைகளின் பிரதிநிதிகள், இலங்கைக்கு உதவி வழங்கும் அனைத்துச் சருவதேச தரப்புகளுமே போதும் மகிந்தர் ஐயா போதுமென போதித்தார்கள். இவற்றைவிடச் சருவதேசம் ரணிலை எதிர்காலத்தில் பயன்படுத்தத்தக்க வகையில் கையாள்வதும் மகிந்தருக்குப் பெரும் நெருக்கடி தரவே. (90 நாட்களுக்குள் மாற்றம் காட்டுவேன் என ரணில் இப்போது மார் தட்டுகிறார்.) இவைக்கப்பால் செப்ரெம்பர் 12ஆம் திகதி இணைத்தலைமை மாநாடு இறுக்கமான முடிவுகளை எட்டவேண்டிய நிலையிலிருக்கின்றது.

இதேவேளை சிலகாலம் முன் வரை சட்டி சுட்டதடா, கைவிட்டதடா என்கிற நிலையிலிருந்த இந்தியாவிற்கோ தமிழ்மக்கள் மீதான தனது கரிசனையின்மையை மிக மிகச் சாதகமாகச் சிறிலங்கா பயன்படுத்திய முறை கண்டு **அதிர்ச்சி நோய்** ஏற்பட்டுள்ளது. தனது தென்முனையைச் சீர்குலைக்கப் பாகிஸ்தானிய ஐ.எஸ்.ஐ (I.S.I) புலனாய்வுத்துறை சிறிலங்காவில் வேரூன்றிவிட்டது கண்டு பெரும் அதிருப்தி. 1971இல் பங்களாதேச போர் காலத்தில் சிறிலங்கா செயற்பட்ட விதம் தொட்டு அண்மையில் முன்னாள் தூதுவரான கேணல் பசிர் வாலியின் குற்றச்சாட்டிற் கப்பால் மிக முக்கிய காலகட்டத்தில் சிறிலங்காத் தூதரகப் பாக் நியமித்திருக்கும் பாக் விமானப் படைப் பிரதித் தளபதியாகவிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற **எயர் வைஸ் மாஷல் அஸ்லாம் செளத்திரி** வரை இந்தியாவிற்குச் சிறிலங்கா சொல்லும் செய்திகள் ஏராளம். இங்குள்ள மிக முக்கிய வெளிப்பாடு என்னவென்றால் புலிகளை ஒடுக்கப் பாகிஸ்தான் மூலம் சிறிலங்கா பெறும் உதவிகள் அனைத்துமே **இந்தியாவின் தென்முனையைச் சீர்குலைக்கவும் பயன்படத்தக்கவை என்பதே.** உதாரணமாகச் சொல்வதானால் அஸ்லாம் செளத்திரி எப்படிப்பட்ட ஆபத்தான பேர்வழியென இந்தியத் தரப்பே பட்டியலிட்டுள்ளது. செளத்திரி எதிர்க்கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளில், எவ்விதம் வான்படையைப் பயன்படுத்த முடியுமென்பதில் அனுபவமும், தேர்ச்சியும் பெற்றவர். இவர் F16 வகை வானூர்திகளை, அமெரிக்காவிலிருந்து பெறுவதில் பங்காற்றியவர். அடுத்தவருடம் பாக் வான்படையில் இணைக்கப்படப்போகும் பாக் + சீனக் கூட்டுத் தயாரிப்பான JF17 வகை இடிமுழக்கம் என அழைக்கப்படும் வானூர்தித் தயாரிப்பின் இணைப்பாளர். சீனாவிலிருந்து M 9, M 11 ஏவுகணைகள், வடகொரியாவிலிருந்து நோடோர் வகை ஏவுகணைக் கொள்வனவுகளில் ஈடுபட்டவர். இவ்வாறானா “பெருமைகள்’’ பெற்ற செளத்திரி நிகழ்கால, எதிர்கால சிறிலங்கா + பாக் இராணுவ ஒத்துழைப்பின் மையப்புள்ளியாவார் என்பதில் என்ன ஐயம்? இதேவேளை சீனக் கதையோ அதன் பெரும்சுவர் போல் பெரும் கதை. சுருக்கின் பாரிய எண்ணெய்ப் படுகையான காவிரி வடிநிலத்தின் 35 விழுக்காடு மன்னார்ப் பிராந்தியத்திலுள்ளது. இதனை ஆறு எண்ணெய் அகழ்வுத் துண்டங்களாகப் பிரித்த சிறிலங்கா சீனாவிற்கு இரண்டு இந்தியாவிற்கு இரண்டெனச் சமத்துவநிலை பேணுகின்றது. இதே

(11ஆம் பக்கம் பார்க்க)



**மகிந்தருக்குக் கிடைத்திருக்கும் அவகாசம் குறுகியது. அதற்குள்ளே மரம் தாவும் மந்திபோல மகிந்தர் பல தொங்குநிலைகளில் (சிறிய கட்சிகள் இணைப்பு, தேசிய அரசாங்க அழைப்பு, நோர்வேக்குத் தூது) செயற்பட்டுத் தமிழ்மக்களின் முதுகெலும்பை உடைக்கத் துடியாகத் துடிப்பதன் விளைவே இன்றைய நிகழ்வுகள். இற்றைவரையிலான அனைத்து அடக்குமுறைகளுக்கும் முகம் கொடுத்த எம்மினிய மக்கள் தமது தாங்குநிலையை மீண்டும் நிரூபிப்பர். விடுதலைப் போராட்டமென்பது வெற்றி / தோல்வி என சுருக்கி வகைப்படுத்தக் கூடியதல்ல. அது எதிரியை விடவும் போராடும் சக்தியால் எத்தனை நிமிடம் கூடுதலாகத் தாக்குப்பிடிக்க முடியுமென்பதிலேயே தங்கியுள்ளது.**

- க.வே.பாலகுமாரன் -



www.eelamview.com

www.eelamview.com





# விடுதலைக்கான ஆட்சேர்ப்பு

எமது விடுதலைப் போராட்டத்தின் மையநிலமாகவும் - உந்துதளமாகவும், இன்றைய நிலையில், வன்னிப் பெருநிலப்பரப்பு விளங்குகின்றது. இந்தப் போராட்ட மையத்தைப் பாதுகாத்தபடி – வன்னியைப் பின்தளமாகக் கொண்டு நிலமீட்புச் சமர்களை நடாத்தப் புலிகள் இயக்கம் தயாராகிவருகின்றது.

ஆனால் இந்தப் போராட்டமையத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் விதத்தில் வன்னிநிலப்பரப்பு மீது பாரிய படையெடுப்பொன்றைப் பலமுனைகளில் நடாத்தச் சிங்களப் படைத்தலைமை திட்டமிட்டு வருகின்றது.

எதிரிப்படைகளின் படையெடுப்பு முயற்சியை முறியடிக்க வேண்டிய பொறுப்பும் அதேசமயம் புலிகளின் நிலமீட்புச் சமருக்கு உதவவேண்டிய கடமையும் வன்னிவாழ் மக்களிடமே உள்ளது.

ஏற்கனவே இத்தகைய வரலாற்றுப் பொறுப்புகளை வன்னிவாழ் மக்கள் கனகச்சிதமாகச் செய்துமுடித்து போராட்ட வண்டியை முன்னோக்கித் தள்ளி வெற்றிப்பாதையில் பயணிக்கச் செய்திருக்கின்றனர்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகப் புலிகள் இயக்கம் நடாத்திய வீரமிகு போராட்டத்தில் வன்னிவாழ் மக்களின் பங்களிப்பு மகத்தானதாக இருந்தது.

அதுபோல, வன்னிப் பெருநிலப்பரப்பை இரண்டாகப் பிளந்து போராட்ட இதயத்தை நசுக்கிச் சிதைக்கும் எண்ணத்துடன் 'ஜயசிக்குறு' என்ற பெயரில் சிங்கள அரசு செய்த வன்கவர்ச் சமரைப் புலிகள் இயக்கம் முறியடித்து வெற்றிவாகை சூடியதற்கு வன்னிவாழ் மக்கள் அளித்த போராட்டப் பங்களிப்பு மகத்தானதாகவே இருந்தது.

அதே மாதிரியானதொரு வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வரும்படி வன்னிவாழ் இளையோரிடம் புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

பாரியதொரு நிலமீட்புச் சமர்த்திட்டத்தை மனதில் வைத்தபடி – அதற்கு முன்னேற்பாடாக வன்னி நிலப்பரப்பெங்கும் ஒரு மக்கள் போர்க் கட்டமைப்பைப் புலிகள் திட்டமிட்டு மேற்கொண்டுவந்தனர்.

எந்தவித சலசலப்புமில்லாமல் மிகவும் நேர்த்தியான முறையில் கட்டப்பட்டுவந்த அந்தப் போர்க் கட்டமைப்பை வன்னிவாழ் மக்களும் ஏற்றுக்கொண்டு முழு ஒத்துழைப்பையும் உற்சாகமாக வழங்கி – தற்காப்புப் பயிற்சிகள் பெற்றுவந்தனர்.

ஆனால், போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகவே மீறும் வகையில், சிங்களப் படைகள், தமிழர் தாயகம் மீது நில ஆக்கிரமிப்புச் சமர்களை நடாத்தத் தொடங்கின.

திருக்கோணமலையில் படையினர் தொடங்கிய அந்த நில ஆக்கிரமிப்புச் சமர்கள் மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் – வன்னி – அம்பாறை – மன்னார் என விரிந்துசென்றன.

மக்கள் இலக்குகள் மீது பாரிய அளவில் வான் தாக்குதல்களையும் – ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமிழ்மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் - பல்லாயிரக்கணக்கில் அகதிகளாகவும் ஆக்கப்பட்டு வருகின்றனர்.

**- சு. ரவி -**

சிங்கள அரசின் இந்த ஒட்டுமொத்த ஒப்பந்த மீறலையும் – தமிழ்மக்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்களையும் சர்வதேச சமூகம் வெறுமனே பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றது.

இதேசமயம், போராட்ட மையமான வன்னிப் பெருநிலப் பரப்பின் மீது ஒரு பாரிய படையெடுப்பைப் பலமுனைகளில் நடாத்தச் சிங்களப் படைகள் தயாராகிவருகின்றன.

அதற்கு முன்னேற்பாடாக முகமாலை முன்னரங்கங்களில் இருந்து படையினர் தொடர்ச்சியாக நடாத்திவரும் எறிகணைத் தாக்குதல் – வான் தாக்குதல்களால் பளை - இயக்கச்சிப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தோடியுள்ளனர். நாகர்கோவில் முன்னரங்கிலிருந்து படையினர் நடாத்தும் கொலைவெறித் தாக்குதலால் வடமராட்சி கிழக்குவாழ் மக்கள் முழுமையாகவே இடம் பெயர்ந்துவிட்டனர். முன்னர் தள்ளாடிப் படைமுகாமிலிருந்து நடாத்தப்படும் தாக்குதல்களால் அடம்பன் மற்றும் அதைச் சூழவுள்ள ஊர்களில் இருந்து மக்கள் அகதிகளாகியுள்ளனர். இதுபோன்று வவுனியா மற்றும் கொக்கிளாய்ப்பகுதி படை முகாம்களில் இருந்து படையினர் நாடத்தும் எறிகணைத் தாக்குதல்களால் வவுனியா வடக்கு மற்றும் மணலாறுப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அல்லலுறுகின்றனர். இவ்விதம் வன்னிப் பெருநிலப்பரப்பு நாற்புறமும் தாக்குதலுக்கு உள்ளாகின்றது.

இதே சமயம், வன்னிமீது உணவு – மருந்துத் தடைகளையும் போக்குவரத்து – தொலைத்தொடர்புத் தடைகளையும் பிறப்பித்து அவற்றை இறுக்கமாக அமுல்படுத்தியும் வருகின்றது.

இவ்விதம் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் ஒரு பதட்டமான அசாதாரண இராணுவச் சூழலைச் சிங்கள அரசு ஏற்படுத்தியுள்ளது.

சிங்கள அரசு ஏற்படுத்தியுள்ள இந்த அசாதாரண இராணுவச் சூழலுக்கு முகங்கொடுத்து எமது விடுதலைப் போராட்டத்தை வெற்றியை நோக்கி உந்தித் தள்ளவேண்டிய

> **போராட்ட மையத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் விதத்தில் வன்னி நிலப்பரப்பு மீது பாரிய படையெடுப் பொன்றைப் பலமுனைகளில் நடாத்தச் சிங்களப் படைத்தலைமை திட்டமிட்டு வருகின்றது.**
>
> **எதிரிப்படைகளின் படையெடுப்பு முயற்சியை முறியடிக்க வேண்டிய பொறுப்பும் அதேசமயம் புலிகளின் நிலமீட்புச் சமருக்கு உதவவேண்டிய கடமையும் வன்னிவாழ் மக்களிடமே உள்ளது.**

கடப்பாடு புலிகள் இயக்கத்திற்கு உண்டு. எனவேதான், தற்போதைய ஆட்சேர்ப்பு முயற்சியையும் வழமைக்கு மாறாக அசாதாரண வழிமுறைகளிலேயே நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்குப் புலிகள் இயக்கம் தள்ளப்பட்டுள்ளது.

வழமைபோல சாதாரணமாக – மெதுவாக – ஆட்சேர்ப்பை நடாத்தினால் எதிரியின் மூர்க்கமான போர்த்திட்டத்திற்குள் எமது போராட்டம் சிக்கிச் சின்னாபின்னமாகிவிடும் ஆபத்துண்டு. அதனாலேயே வழமைக்கு மாறாக அசாதாரணமான முறையில் - விரைவான வழிகளில் ஆட்சேர்ப்பை நடாத்தப் புலிகள் இயக்கம் முடிவெடுத்துள்ளது. இந்த அசாதாரண ஆட்சேர்ப்பு முறை எமது மக்கள் மத்தியில் சலசலப்பையும், அதிர்ச்சிகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்தியிருப்பதை அனைவரும் அறிவர்.

எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் இவ்விதமான அசாதாரண நெருக்கடிக்கு எமது இயக்கம் பலமுறை முகங்கொடுத்து உறுதியுடன் செயற்பட்டு வெற்றிபெற்று எமது மக்களையும் - போராட்டத்தையும் பாதுகாத்து வருகின்றது என்பது வரலாற்று உண்மையாகும்.

விடுதலைக்காகப் போராடுகின்றோம் என்ற பெயரில் துரோகிகளாகவும் - அன்னியரின் கைக்கூலிகளாகவும் செயற்பட்ட முன்னாள் இயக்கங்களைத் தடைசெய்யும்போது அதன் அரசியல் தார்ப்பரியங்களை விளங்கிக்கொள்ள முடியாமல் அப்போது மக்கள் குழப்பிப்போயிருந்தனர். ஆனால் காலம் செல்லச்செல்ல புலிகளின் முடிவை மக்கள் முழுமையாகவே விளங்கிக்கொண்டு ஏற்றிருந்தனர்.

இதுபோன்றுதான், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர்புரியப் புலிகள் இயக்கம் முடிவெடுத்தபோது அது முட்டாள்தனமானது – தற்கொலைக்கு ஒப்பானது என்று மக்கள் கவலையடைந்தனர். ஆனால் அந்த முடிவே போராட்டத்தைப் பாதுகாத்து – வளர்த்துவிட்டது என்ற உண்மையைப் பின்னர் கண்டு மகிழ்ச்சியும் - பெருமையும் அடைந்தனர்.

அதுபோல, வலிகாம இடப்பெயர்வையும் அப்போது கணிசமான மக்கள் கடும் விமர்சனத்துடனேயே பார்த்தனர். அது ஒரு தேவையற்ற நடவடிக்கை என்று விமர்சித்திருந்தனர். யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு வாழ்வே சிதைந்துவிட்டது என்று ஆதங்கப்பட்டனர். ஆனால் மீளக்குடியேறச் சென்ற மக்களில் ஆயிரம்பேரைச் சிங்களப்படைகள் கொன்றுதள்ளி – செம்மணி வெளியில் புதைத்த உண்மைகளைக் கண்டறிந்தபோது இடப்பெயர்வு என்ற புலிகளின் தீர்க்கதரிசன முடிவை மக்கள் புரிந்துகொண்டனர்.

வலிகாமத்தைச் சிங்களப்படைகள் ஆக்கிரமித்த பின்னர் மீளக்குடியேறச் சென்ற மக்களில் ஆயிரம்பேரை அவர்கள் கொன்றார்கள் என்றால், கொலைவெறியுடன் பழிதீர்க்க அவர்கள் மூர்க்கத்தனமாக முன்னேறிவரும்போது வலிகாமத்தில் மக்கள் இருந்திருந்தால் எத்தனை ஆயிரம்பேரை கொன்று தள்ளி, எத்தனை – எத்தனை விதமான அவலங்களை – கொடுமைகளை மக்கள் மீது திணித்திருப்பார்கள் என்பதைப் பின்னர் மக்கள் உணர்ந்துகொண்டனர்.

இத்தகைய வரலாற்றுச் சம்பவங்களைப் போலத்தான் தற்போதைய ஆட்சேர்ப்பு முறையும் சர்ச்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டாலும் தவிர்க்கமுடியாத ஒரு போராட்டத் தேவையின் நிமித்தம் எழுந்த ஒரு நடவடிக்கை என்பதை எமது மக்கள் உணர்ந்து – தெளிவடைய வேண்டும் என்பது புலிகளின் வேண்டுகோளாகும்.

அசாதாரண சூழலுக்குள் இந்த அவசர ஆட்சேர்ப்பை நடாத்தினாலும் சர்வதேச சட்டங்களையும் - நியமங்களையும் மற்றும் மனச்சாட்சிக்கு மதிப்புக்கொடுத்தும் ஆட்சேர்ப்பை புலிகள் நடாத்துகின்றனர்.

17 வயதிற்கு உட்பட்டவர்களைப் படையில் சேர்க்கக் கூடாது என்ற சர்வதேசச் சட்டம் இந்த அவசர ஆட்சேர்ப்பிலும் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

தனியொரு பிள்ளையைக்கொண்ட குடும்பத்தில் அந்தப் பிள்ளையை இயக்கத்திற்கு எடுக்கக்கூடாது என்பது இயக்கத்தின் நிலைப்பாடாக உள்ளது. குடும்ப விருட்சம் ஒன்று கிளைபரப்பி – வேரூன்றி, விழுதெறிவதை இந்த அசாதாரண சூழலிலும், பாதுகாக்கப் புலிகள் முயல்கின்றனர்.

மாவீரர் குடும்பங்களில் இருந்து ஆட்சேர்ப்பைச் செய்யக் கூடாது என்று இயக்கம் உத்தரவிட்டுள்ளது. விடுதலைக்கு உயிர்விலை கொடுத்த குடும்பங்களில் இருந்து மீண்டும் - மீண்டும் ஆட்சேர்ப்பது மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகும். சில குடும்பங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட மாவீரர்களைக்கொண்டு விளங்குகின்றன. இந்த மாவீரர் குடும்பங்கள் இந்தத் தேசத்தின் மதிப்பிற்குரிய குடும்பங்களாகவே கருதப்படுகின்றன.

போராளி குடும்பங்களிலிருந்து ஆட்சேர்ப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. தங்கள் இன்னுயிர்களைப் பணயம் வைத்து எதிரிப்படைகளுடன் களமாடி எமது மக்களை – மண்ணைப் பாதுகாக்கப் போராடுகின்றனர். இந்தக் குடும்பங்களும் தேசத்தின் கௌரவம் மிக்க குடும்பங்களாகவே மதிப்பளிக்கப்படவேண்டும். இவை தவிர, இதுவரை, போராட்டப் பங்களிப்பைச் செலுத்தாத குடும்பங்கள் தங்களது ஒரு பிள்ளையைப் போராட்டத்திற்கு உவந்தளிக்க வேண்டும் என்று இயக்கம் கோருகின்றது. இத்தகைய குடும்பங்களிலிருந்து அவசர ஆட்சேர்ப்புச்செய்ய இயக்கம் முயற்சிக்கின்றது. இதை மக்கள் புரிந்துகொண்டு ஒத்துழைக்கவேண்டும் என்று புலிகள் இயக்கம் கேட்டுக் கொள்கின்றது.

படைபலம்தான் தமிழினத்தின் காப்புக் கவசம். படைபலம்தான் தமிழினத்தினுடைய விடுதலையின் திறவுகோல். படைபலம்தான் தமிழருடைய மகிழ்ச்சியான வாழ்க்கையின் அத்திவாரம். அந்த விடுதலைப்படையில் இணைந்திருப்பதுதான் ஒரு குடும்பத்திற்குக் கௌரவமான சமூக வாழ்வைத் தரும். வீட்டிற்கு ஒருவர் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டால் வெற்றி எம்பக்கம் விரைவில் வந்துசேரும். ●



www.eelamview.com

www.eelamview.com



# மகிந்த சிந்தனை
# யுத்தநிறுத்தத்துள் யுத்தம்

சம்பூரைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிவிட்டதற்கான வெற்றியை தளபதிகளுடன் 'கேக்' வெட்டிக் கொண்டாடியிருக்கிறார் தன்னை சிங்கள நாட்டுப்புறத்தவரின் தோழனாகக் காட்டிக்கொள்ளும் சனாதிபதி ராஜபக்ஷ. சம்பூரையும் இனத்துவ வன்மத்தையும் சுமந்தபடி சிங்கள ஊடகங்களின் உற்சாகம் அலைபுரண்டு பிரவாகிக்கின்றது.

> 'குந்தி' கேட்டாள் என்பதற்காகக் கவசத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு போருக்குப் போய் கர்ணன் மாண்டதுபோல் ராஜபக்ஷ யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கழற்றிவிட்டுத் தான் மாண்டுபோகத் தயாரில்லை.



முன்பொரு தடவை யாழ்ப்பாணத்தைச் சிங்களப்படை கைப்பற்றியதற்காக சிங்களதேசம் விழா எடுத்தது. விழாவில் 'சேனாதிபதி' ரத்வத்தை பட்டுத்துணியில் யாழ்.நாடு பிடிக்கப்பட்ட செய்தியை எழுதி தங்கத் தாம்பாளத்தில் வைத்து 'அரசி' சந்திரிகாவிடம் ஒப்படைத்தார். புளகாங்கிதமடைந்த 'அரசி'யார் தங்க வாள் ஒன்றை 'சேனாதிபதி'க்குப் பரிசளித்தார்.

அதற்கும் முன் 1983 கறுப்பு யூலை இனவழிப்பு நிறைவுற்றபோது அப்போதைய அரசாங்கமான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களான காமினி திசநாயக்கா, சிறில் மத்தியூ, பிறேமதாசா ஆகியோர் தமக்கிடையிலான ஆளுமைப் போட்டியில் தமது தலைமைத்துவப் பலத்தை நிருபிப்பதற்கான வெற்றியாக அதைக் கொண்டாடியதாகத் தகவலுண்டு. மேலும் அப்போது இந்த வெற்றியின் குறியீடாக குட்டிமணியின் கண்களைத்தோண்டி இரத்தத்தை எடுத்து புத்தருக்கு அர்ச்சிக்கப்பட்டதாகச் சிங்கள வெகுசனங்களிடம் ஒரு கதையுண்டு.

இதற்கும் முன்பொரு காலத்தில் துட்டகைமுனுவின் தாய் கர்ப்பமாக இருந்தபோது ஆசைப்பட்டுக் கணவனிடம் கேட்டாளாம் தான் ஒரு தாம்பாளத்தில் தலைவிரியாக ஏறிநிற்க தமிழர் ஒருவரின் தலையை வெட்டிவந்து அதிலிருந்து வரும் இரத்தத்தைப் பருகத் தரவேண்டும் என்று. கர்ப்பமாக இருந்த தன் மனைவி விகாரமாதேவியின் இந்தக் கர்ப்பகால ஆசையை கணவன் நிறைவேற்றினார் என்று சிங்கள பௌத்தர்கள் தங்கள் 'பைபிள்'ளாகப் போற்றும் மகாவம்சம் போதிக்கிறது.

தமிழர்கள் மீதான வெற்றிச்செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு கூட்டு உளவியல் சிங்கள தேசத்தில் எப்பொழுதும் விழிப்புடன் இருந்துவருகிறது. இதுதான் இந்த இனத்துவப் பிரச்சினையின் ஆதார சுருதி. இதைக் கையாளத் தெரிந்தவர்களால் சிங்களச் சிம்மாசனத்தில் ஏறவும், தலைமைத்துவத்தைப் பாதுகாக்கவும் முடிகிறது. இப்போது மகிந்த ராஜபக்ஷவின் முறை.

ராஜபக்ஷ பதவிக்கு வருவதற்காக சனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்தர்களில் எண்பது வீதமானவர்கள் வாக்களித்தது ராஜபக்ஷ தலைமைத்துவக் கவர்ச்சி கொண்டவர் என்றோ, அரசியல் பாரம்பரியம் உள்ளவர் என்றோ அல்லது அவரொரு சாமர்த்தியசாலி என்று கருதியோ அல்ல. மாறாக, மூன்றுவருடம் நடந்த சமாதானத்தில் ரணில் அரசாங்கம் தமிழர்மீதான வெற்றிச்செய்தியை தரத் தவறியதனால் ஏற்பட்ட அதிருப்தியும் கோபமும்தான் மகிந்தவை சனாதிபதியாக்கிற்று.

யுத்தத்தில் முடியாது போனால், சமாதான மார்க்கத்திலாவது தமிழர்தரப்பை ஏமாற்றிச் சதிசெய்து வெற்றிகொண்ட செய்தியை சிங்களத் தரப்பு எதிர்பார்க்கும் இத்தகைய கூட்டு உளவியலை ராஜபக்ஷ புரிந்துகொண்டதன் சாட்சியம்தான் வரையப்பட்ட மகிந்த சிந்தனை. இந்தக் கூட்டு உளவியலைக் கையாளத் தெரிந்ததனால் மகிந்த சனாதிபதியானார். இந்தக் கையாளலுக்குக் கைமேல் உடனடியாகக் கிடைத்த வெற்றியின் உருசியை ராஜபக்ஷ கைவிடப்போவதில்லை. அதைமேலும் சிறப்பாக வளர்த்தெடுத்து மெருகாகக் கையாள்வது என்பதுதான் அவரது அரசியல்.

> யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு ராஜபக்ஷ சம்பூர்மீது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கும் நம்பிக்கையையோ திராணியையோ கொண்டிருக்கவில்லை. எனவேதான் மாவிலாறு இதற்காகக் கையாளப்பட்டது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததன் பின்னால் நடைபெறக்கூடிய யுத்தத்தில் புலிகளால் பிரயோகிக்கக்கூடிய இராணுவ மூலோபாயத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரத்தாகாத சூழலில் பிரயோகிக்க முடியாது என்பதை இராணுவ; அரசியல் அர்த்தத்தில் விளங்கியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் பகுதிமீது நடாத்தப்பட்ட தொடர்ச்சியான கிபிர் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள், இராணுவ மற்றும் ஒட்டுப்படைகளின் கொலைவெறியாட்டங்கள் என்பவற்றால் பலியாகும் மக்களும், இடம்பெயரும் மக்களும் சிங்களப் பத்திரிகைகளின் முன்பக்கத்தை தினசரி நிரப்பிக்கொள்வதை மகிந்த பேணிப் பாதுகாக்க விரும்பினார். அத்தகைய விளைபொருளின் சக்தி யாதெனில் மகிந்தவிற்கு எதிரான எந்தச் சவாலையும் முறியடித்துப் பின்தள்ளிவிடும் வல்லமையை அது கொண்டிருந்தது.

இத்தகையதொரு அரசியல் பின்னணியில்தான், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி மகிந்த சம்பூர்மீதான வெற்றியைப் பெற ஆசைப்பட்டார். சிங்களதேசத்து எதிர்பார்ப்புக்குத் தீனிபோட்டால் தன்னையொரு ஜாம்பவானாகக் காட்ட இது வழிசெய்யும் என்பது அவருக்குத் தெரியும். இதற்கு யுத்தநிறுத்த ஒப்பந்தமே ஒரு கவசமாகத் தனக்குத் துணைபுரியும் என்பதையும் அவர் புரிந்துகொண்டார். அந்தக் கவசத்தைக் கழற்றிவிட்டு யுத்தம் செய்ய மகிந்த தயாரில்லை. சம்பூர் வெற்றிக்கான அதிஷ்டத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தமே மகிந்தவுக்குப் பெற்றுத்தந்தது என்பதே மெய்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு ராஜபக்ஷ சம்பூர்மீது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கும் நம்பிக்கையையோ திராணியையோ கொண்டிருக்கவில்லை. எனவேதான் மாவிலாறு இதற்காகக் கையாளப்பட்டது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததன் பின்னால் நடைபெறக்கூடிய யுத்தத்தில் புலிகளால் பிரயோகிக்கக்கூடிய இராணுவ மூலோபாயத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரத்தாகாத சூழலில் பிரயோகிக்க முடியாது என்பதை இராணுவ, அரசியல் அர்த்தத்தில் விளங்கியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மகிந்த கொண்டாடிய சம்பூர் வெற்றியின் உற்சாகமும், சிங்கள ஊடகங்களில் பிரவாகிக்கும் மகிழ்ச்சி ஆரவாரமும் மகிந்தவை ஜாம்பவானாக சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கிவிட்டது உண்மை. ஆனால், மறுவழத்தில் அது யுத்தநிறுத்தத்தையும் நோர்வேயையும் தூக்கி எறிந்துவிட்டு முழு அளவிலான யுத்தத்திற்கும், முழு அளவிலான வெற்றிக்கும் அவாக்கொண்டு நிற்கின்றது.

**கு.கவியழகன்**

ஆனால், 'குந்தி' கேட்டாள் என்பதற்காகக் கவசத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு போருக்குப் போய் கர்ணன் மாண்டதுபோல் ராஜபக்ஷ யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கழற்றிவிட்டுத் தான் மாண்டுபோகத் தயாரில்லை.

சிங்களப் புத்திஜீவிகளுடன் அந்நியோன்னியமாகப் பழகும் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் சொன்னார், "மகிந்தவே விரும்பினாலும் சம்பூரின் பின் அவர் புலிகளுடன் சமாதானம் செய்யச் செல்லமுடியாது. தமிழ்த்தரப்பு அரசுடன் பேரம் பேச உட்காரும் தகைமையைக்கூட சகிக்க இப்போது சிங்கள மக்கள் தயாரில்லாத சூழல் உருவாக்கப்பட்டுவிட்டது" என்று.

இப்போது மகிந்த என்னசெய்யப் போகிறார்? 'கேக்' வெட்டும்போதே அவருக்குத் தெரியும் தங்க வாள் பெற்ற சேனாதிபதியும் வீரபுருசக் கதாநாயகனுமான அனுருத்த ரத்வத்த பின்னர் கைதியாகச் சிறையில் வாடியது. அதற்காக சர்வதேசம் யுத்தநிறுத்தக் கவசத்தோடு மகிந்த தமிழர் உயிர்களைக் காவுகொள்வதற்கு சமாதானத்தின் பெயரால் அவருக்கு வகைசெய்து கொடுக்கமுடியாது. தொடரப்போவது அதுதான் என்றால் பிரபாகரன் ஒரு புதிய விதிசெய்வார்.


www.eelamview.com

www.eelamview.com



> **"அனைத்துத் தமிழ்மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்குகொண்டால், எமது விடுதலை இலட்சியம் வெற்றிபெறுவது நிச்சயம்."**
>
> - தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் -



# ஆக்கிரமிப்பாளர்களும் விடுதலைக்கான சேனையும்

**இராணுவ ஆக்கிரமிப்பை** எதிர்க்காதவர்கள் அடிமைப்படுகிறார்கள் அல்லது ஆக்கிரமிப்பவனின் இனத்தில் கரைந்து போகிறார்கள். தன்னுடைய நீண்ட வரலாற்றில் தமிழர் தாயகம் பல போர்களை, படையெடுப்புக்களை, ஆக்கிரமிப்புக்களைச் சந்தித்திருக்கிறது. இப்போதும் அதன் கணிசமான பகுதி அந்நியன் பிடியில் சிக்கியிருக்கிறது. இதனால் தமிழர் வாழ்வின் அமைதியும் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றவர் படையெடுப்புக்களை நாம் அனுமதித்ததில்லை. வெற்றிகரமாக எதிர்த்திருக்கிறோம், தோற்றுமிருக்கிறோம், புறமுதுகு காட்டி ஓடாமல் தந்திரோபாயமாகப் பின்வாங்கியிருக்கிறோம்.

தமக்குரிய ஆளும் உரிமை இறையருள் போன்ற சக்திமூலம் கிடைத்ததாக ஆக்கிரமிப்பாளர்கள் நம்புகின்றனர். 1883இல் இந்திய அரசில் அயல்நாட்டுச் செயலராகப் பதவி வகித்த ஆங்கிலேயர் சேற்றன்கேர் (SETON KERR) "பிறரை அடக்கியாண்டு ஆளுகை செய்கிற இனத்தில் கடவுள் என்னைப் படைத்திருக்கிறான்" என்ற தனது நம்பிக்கையை எழுத்தில் வடித்துள்ளார். சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கைத்தீவை புத்தர் தமக்கு அளித்ததாக நம்புகின்றனர். தமிழர்கள் உரிமை பாராட்டும் தகுதி அற்றவர்கள் என்பது அவர்கள் சித்தாந்தம்.

2005 ஜீலை 17ஆம் நாள் இலண்டன் மாநகரிலுள்ள அனைத்துலகத் தமிழர் ஆதார மையத்தின் (INTERNATIONAL TAMIL FOUNDATION) அழைப்பிற்கிணங்க அங்கு வருகை தந்து உரையாற்றிய சிறிலங்கா நிர்வாகசேவையின் முன்னாள் உறுப்பினர் நெவில் ஜெயவீர தமிழர்களுக்கு உரிமை வழங்குவதற்குத் தடங்கலாக இருக்கும் மூன்று வரலாற்றுக் காரணிகளை எண்பித்தார். மகாவம்சத்தின் ஆறாம் அத்தியாயத்தில் இலங்கைத்தீவு சிங்கள மக்களுக்கு மாத்திரம் சொந்தம் என்றும் இத்தீவின் மதம் பௌத்தம் என்றும் ஐயம் திரிபடக் கூறப்பட்டுள்ளது. இத்தீவின் விவகாரங்கள் அனைத்தும், யார் ஆட்சிப் பொறுப்பில் இருப்பார் என்பது உட்பட மகாசங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும். மூன்றாவதாகச் சோழர் படையெடுப்பின்போது சிங்கள நாகரிகம் அழிவை நெருங்குவதற்குத் தமிழர்கள் காரணியாவர். இம் மூன்றும் தூக்க நிலையில் இருப்பதுபோல் தோன்றினாலும் இலங்கை அரசியலைத் தீர்மானிப்பவை இவை மூன்றும்தான் என்றார் ஜெயவீர. சிறிய சலுகைகளுக்காகப் போரிடுங்கள், சிலவேளை சர்வதேச சமூகம் அதற்கு ஆதரவு வழங்கலாம் என்றும் அவர் இறுதியாகக் கூறிச்சென்றார். எமது விடுதலைப்போரை ஏளனம் செய்வது அவரது அடிப்படை நோக்கமாக இருந்தது.

எவ்வகை ஆக்கிரமிப்பாக இருப்பினும் அது பாதிக்கப்பட்டவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும். ஆக்கிரமிப்பாளர்கள் தம்மை மீட்பர்கள், அமைதி காக்க வந்தவர்கள் என்று சொல்வார்கள். அது ஒருபோதும் மெய்யாக இருந்ததில்லை. நல்லெண்ணத்தோடு உட்புகுந்த ஆக்கிரமிப்பாளன் மிகச் சிறிய காலத்தில் சுயரூபத்தைக் காட்டுவான். ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் எல்லாவகை விளக்கங்களையும் அகற்றிப் பார்க்கும்போது ஆக்கிரமிப்பாளன் மக்களால் விரும்பப்படாதவன் என்பது புலப்படும். நல்ல ஆக்கிரமிப்பாளன் தீய ஆக்கிரமிப்பாளன் என்று கிடையாது. உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் ஜோர்ஜ் ஓர்வெல் (GEORGE ORWELL 1903 - 1950) சிலகாலம் இப்போது மியன்மார் எனப்படும் பர்மாவில் பணியாற்றியவர். ஆங்கிலேயர்கள் எந்த நாட்டில் எவ்வாறு மதிப்பிடப்பட்டனர் என்பதை அவர் விவரிக்கிறார். "பர்மாவில் வாழ்ந்த வெள்ளை இன மக்களில் அந்த நாட்டு மக்களால் மிகக் கூடுதலாக வெறுக்கப்பட்டவர்கள் ஆங்கிலேயப் படையினரே. அவர்கள் நடத்தையை நான் பார்த்தளவில் பர்மிய மக்களின் வெறுப்பில் நியாயமுண்டு" என்கிறார் ஓர்வெல். ஆங்கிலேயர்கள் வெறுக்கப்பட்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. 1948ஆம் ஆண்டு பர்மா விடுதலை பெறும்வரை நீடித்த பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் காலத்திற்குக் காலம் எதிர்ப்புக்களும், கலகங்களும் நடந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பர்மாவில் குடியேறிய இந்தியர்களும் அந்நியர்களுக்கு எதிரான போராட்டங்களால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பஞ்சாபிகள், குஜராத்திகள், மதராசிகள் (தமிழர்கள்) பர்மாவில் குடியேறினர். 1942ஆம் ஆண்டு பர்மா ஜப்பானியப் படைகளின் பிடியில் வந்தபோது பெருமளவு இந்தியர்கள் பர்மாவைவிட்டு வெளியேறினர்.

விடுதலைபெற்ற பர்மாவின் 1960களில் பரவலான அந்நியர் எதிர்ப்பு நடைபெற்றது. இந்த எதிர்ப்பு பெரும்பாலும் இந்தியர்களுக்கு எதிராக நடத்தப்பட்டது. வட்டிக்குப் பணம் வழங்கும் தமிழ்நாட்டுச் செட்டியார்களும் தஞ்சாவூர் வர்த்தகர்களும் விரட்டப்பட்டனர். சமுதாய ரீதியில் இந்தியர்கள் பர்மிய மக்களோடு இணைந்து நடந்ததில்லை. தமிழர்கள் பர்மியப் பெண்ணைத் திருமணம் செய்ய நேர்ந்தால் அப்பெண்ணின் பெற்றார் வீட்டில் உணவருந்துவதைத் தவிர்த்தார்கள். பெருமளவு தமிழர்கள் வெளியேற்றப்பட்டுவிட்டாலும் இன்றும் தலைநகர் ரங்கூனில் (இப்போது யங்கொன என்று பெயர் மாற்றம்) சைவக்கோயில்களும், தமிழ்பேசும் தமிழர்களும், தமிழர்களின் வர்த்தக நிலையங்களும் காணப்படுகின்றன.

இந்தோ - மியன்மார் எல்லைப்புற நகரமான மோறேயில் (MOREH) 17,000 வரையிலான தமிழ்நாட்டுத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் மூன்றுகட்டமாக மியன்மாரில் இருந்து இங்கு வந்துள்ளனர். முதற்கட்டமாக ஜப்பானியப் படையெடுப்பின்போது பலர் சுபாஷ் சந்திரபோஸ் வழிநடத்திய இந்திய தேசிய இராணுவத்தில் (INDIAN NATIONAL ARMY - INA) உறுப்பினர்களாக இருந்தனர். பர்மாவிலிருந்து சுபாஷின் ஐ.என்.ஏ இராணுவம் மோறேயின் ஊடாக இந்தியாவுக்குள் நுழைந்தது. சுபாஷின் இராணுவம் பின்வாங்கியபோது சில தமிழர்கள் மோறேயில் தங்கிவிட்டனர். 1960களில் பர்மியச் சர்வாதிகாரி ஜெனரல் நேவின் (GEN.NEWIN) ஆட்சி இந்தியர்களை விரட்டியபோது இந்திய வம்சாவழித் தமிழர்கள் மோறே சென்றனர். சிலர் இந்தோ - மியன்மார் எல்லையோரக் கிராமங்களில் மியன்மாருக்குள் வாழ்கின்றனர்.

> **வாழும் முனைப்புள்ள இனம் எதிரியின் தாக்குதலுக்கு முகங்கொடுக்கும் விதத்தில் தனது வலுவைப் பெருக்குகிறது. எதிரியின் தாக்குதலுக்கு நிகராகத் தன்னைப் பலப்படுத்தவேண்டிய தேவை அதற்கு இருக்கிறது. வியட்நாம் போரை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் அமெரிக்க படையினர் எண்ணிக்கை, விமானக் குண்டுவீச்சுச் செறிவு, குண்டுகளின் எடை என்பவற்றை உயர்த்தியபோது தாக்குதலை எதிர்கொள்வதற்கு முழு நாடும், மக்களும் தயாராகின. அமெரிக்கா சில சண்டைகளில் வென்றிருக்கலாம், இறுதிவெற்றி வியட்நாம் மக்கள் பக்கமே. தாக்குப்பிடிக்கும் வலு ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுக்கு இல்லையென்றால் அழிவு நிச்சயம்.**

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தின் எல்லையோர நகரமான மோறே மணிப்பூர் இஸ்லாமபாத் தலைநகரிலிருந்து 110கி.மீ தூரத்தில் இருக்கிறது. தலைநகரின் ஆணை இங்கு செல்லுபடியாவது மிகக் குறைவு. மோறே ஒரு கடத்தல்காரரின் ஆதிக்கம் நிலவும் வர்த்தக நகரம். அதனுடைய புவியியல் அமைவிடம் எல்லை வர்த்தகத்திற்கு மிகவும் உகந்தது. இவ் வர்த்தகம் தமிழர்கள் கையில் இருக்கிறது. இப்பிராந்தியப் பொருளாதார சக்தியாகத் தமிழர்கள் இடம்பெறுகின்றனர். இவர்களுடைய பூர்வீகம் தஞ்சையாக இருந்தாலும் என்றோ ஒருநாள் தமது மியன்மாரின் பழைய வாழ்விடங்களுக்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் தமிழ்பேசும் இந்துக்கள். பெரிய கோயில் கட்டி வழிபடுகிறார்கள். எங்களுடைய தேசியத் தலைவர் அவர்களை ஒவ்வொருவர் வீட்டிலும் படமாக வைத்துப் பூசிக்கிறார்கள். தாயகம் செல்வதற்குப் பிரபாகரன் வழிகாட்டுவார் என்பது அவர்கள் நம்பிக்கை.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இந்திய மக்களின் முதலாவது எதிர்ப்பு 1857இல் தொடங்கி 1859வரை நீடித்தது. இதை இந்திய மக்களின் முதலாவது எழுச்சி என்று குறிப்பிடப்பட்டாலும் அது பிரிட்டிஷ் இராணுவத்தின் இந்தியப் படையினரின் எதிர்பாகவே ஆங்கிலேயர்களால் பார்க்கப்படுகிறது. இதுபற்றி ஜலகர்லால் நேரு தனது கண்டுணர்ந்த இந்தியா (DISCOVERY OF INDIA) என்ற நூலில் "1857 - 1858இல் நடந்த புரட்சி, அடிப்படையில் நிலப்பிரபுக்களின் எழுச்சிதான். அதில் தேசிய நோக்கம் ஓரளவு தென்பட்டது என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. சில சிற்றரசர்களும், நிலப்பிரபுக்களும் ஆதரவளித்ததால்தான் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்." மேற்குநாட்டு ஆய்வாளர்கள் இதை சிப்பாய்க் கலவரம் (THE SEPOY MUTINY) என்றுதான் தமது வரலாற்று நூல்களில் எழுதுவார்கள்.

மகாத்மா எனப்படும் மோகன்தாஸ் கரம்சந்த காந்தியின் வருகைக்குப் பின் இந்திய விடுதலைப்போர் முற்றிலும் மாறுபட்ட வடிவம் எடுத்தது. 1893ஆம் ஆண்டு அவர் வழக்கறிஞர் தொழில் செய்வதற்காக வெள்ளை இனவெறி ஆட்சி நிலவும் தென் ஆபிரிக்காவுக்குச் சென்றார். இருபத்திரண்டு வருடகாலம் அவர் அங்கேயே இருந்தார். வெள்ளை அரசால் தென் ஆபிரிக்கா வாழ் இந்திய மக்கள் நடத்தப்படும் கீழ்த் தரத்துக்கு எதிராகக் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். காந்தி சிறையில் அடைபட்டார். ஆனால் இந்தியர்களுக்கு ஓரளவு நியாயம் கிடைத்தது. இந்த சாத்வீக எதிர்ப்பு இயக்கம் பற்றி நெல்சன் மண்டேலா தனது வாழ்க்கை நூலில் மிகவும் உயர்தரமாக விதந்து பாராட்டியுள்ளார்.

"இந்தியர்கள் நடத்திய எதிர்ப்பியக்கம், சிறைவாசம் பற்றிய அச்சத்தைக் கறுப்பினத்தவர் மனதிலிருந்து அகற்றியது. விடுதலை இயக்கம் என்றால் வெறும் மேடைப்பேச்சல்ல என்பதை உணர்ந்தோம். மிகவும் நுணுக்கமான ஒழுங்கமைப்பு, திட்டமிடல் என்பதோடு மக்கள் எழுச்சியும் ஒன்றிணைந்து இந்தியர்களுக்குப் பலம் கொடுத்தது. 1913இல் மகாத்மா நடத்திய சாத்வீக எதிர்ப்பியக்கத்தை 1946இல் மருத்துவர்களான டாடூவும் நாயக்கரும் (DRS.DADOO AND NAICKER) நடத்தினார்கள். இந்தியர்களின் எதிர்ப்பியக்கம் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரசிற்கு விழிப்பூட்டியது மண்டேலா. 1915இல் மகாத்மா இந்தியா சென்றுவிட்டார். அவர் ஆபிரிக்காவுக்கு வக்கீலாகச் சென்றார். அங்கிருந்து இந்தியாவுக்கு மகாத்மாவாகத் திரும்பினார்.

காந்தியின் இந்தியா வருகை, மூச்சுத் திணறியவர்கள் முகத்தில் இனிய தென்றல் காற்று வீசியது போன்றதாக இருந்தது என்கிறார் நேரு. அவர் அச்சமின்மையைப் போதித்தார். இதுவொன்றும் இந்திய தத்துவ வரலாற்றில் புதிதல்ல. ஜனகரும் யக்ஞவல்க்யரும் 'மக்கள் மனதிலிருக்கும் அச்சத்தைப் போக்குவதுதான் தலைவனின் முதற்பணி' என்று கூறியிருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் மக்களுக்குத் தெரிந்தது அச்சம் ஒன்றுதான். படையைக்கண்டு அச்சம், காவலர்களைக் கண்டு அச்சம், இரகசியக் கண்காணிப்பாளர்களைக் கண்டு அச்சம், நிலப்பிரபுக்களின் கூலிப்படையைக் கண்டு அச்சம், நிர்வாக அலுவலர்களைக் கண்டு அச்சம் இப்படிப் பல அச்சங்கள்: பல இலட்சம் மக்களைக் காந்தி பாதித்தார். 1925இல் காந்தி காங்கிரஸ் தலைமையை ஏற்றார். அந்நிய ஆதிக்க எதிர்ப்பிற்கு ஒட்டுமொத்த அடையாளமாக இந்திய தேசிய காங்கிரஸ் விளங்கிற்று. இந்தியர்கள் அனைவரும் அதன் தலைமையை ஏற்றனர்.

அந்நியர் ஆட்சி எப்போதும் சர்வாதிகார ஆட்சியாகத்தான் அமையும். அது ஜனநாயக ஆட்சியாக இருப்பின் அங்கு அந்நியருக்கு இடமிருக்காது. அந்நியராட்சி இராணுவ உதவியுடன் முன்னெடுக்கப்படும். சிவில் நிர்வாகம் நடப்பது போன்ற தோற்றப்பாடு இருக்கலாம் ஆனால் அடிப்படையில் அது இராணுவ ஆட்சியாக மாத்திரம் இருக்கமுடியும்.

போருபாயத்தால் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட் மக்கள் மீதான ஆட்சி மனித வரலாற்றளவு பழமையானது. ஆனால் நவீன யுகத்தில் இராணுவ ஆட்சி விரிவாக்கப்பட்டதோடு வலுவூட்டப்பட்டும் உள்ளது. ஆட்சிக்குரிய அதிகாரம் இராணுவ வலுவில் இருந்து பிறப்பதால் அதற்குக் காட்டும் எதிர்ப்பு இராணுவ முறையில் எதிர்கொள்ளப்படுகிறது. இராணுவ ஆட்சியாளர்கள் உண்மையான விசுவாசத்தை எதிர்பார்க்காவிட்டாலும் தமது ஆட்சிப்பிடியிலுள்ள மக்களிடமிருந்து கீழ்ப்படிவைக் காட்டாயமாக எதிர்பார்க்கிறார்கள். எதிர்ப்பை நசுக்குவதற்கு இராணுவ உளவுப்படையைச் செயற்படுத்துகிறார்கள். உளவுப்படையினர் ஒட்டுப்படையினரைச் சேர்க்கிறார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர் தாயகத்தில் அபட்டமான இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. சிவில் நிர்வாகம் இராணுவத்தினரின் கட்டளைப்படி இயங்குகிறது. கல்வி அதிகாரிகள் இராணுவத்தினரின் ஆணைப்படி இயங்குகின்றனர். அரசியல் சாசனத்திற்குச் செய்யப்பட்ட 13ஆம் திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபையினரின் ஆளுநராக இளைப்பாறிய கடற்படை அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். நிர்வாகசேவையின் நியமங்களுக்குப் புறம்பாகத் திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிபராக சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஒரு இராணுவ



www.eelamview.com

www.eelamview.com



அதிகாரி அமர்த்தப்பட்டுள்ளார். அந்நியர் ஆட்சியின் அத்தனை குறியீடுகளும் இன்று தமிழர் தாயகத்தில் நிலவுகிறது.

நவீன சர்வதேச அரசியல் இயல்புநிலையின் அளவீடாக அமைதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 17ஆம் நூற்றாண்டு தொடக்கம் மேற்குநாடுகள் மத்தியில் நிலவும் கோட்பாடு, அமைதிதான் இயல்புநிலையின் அடையாளம் என்று வலியுறுத்துகிறது. மத்திய காலங்களில் போர்தான் இயல்புநிலை என்றும் அமைதி ஒரு அசாதாரண இடைவெளி என்றும் கருதப்பட்டது. இன்று போருக்குப் போகுமுன் பேச்சுவார்த்தை தொடக்கம் அமைதி உடன்படிக்கைகள் வரை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. போருக்குச் செல்லமுன் கால அவகாசம் போர்ப்பிரகடனம் போன்ற சம்பிரதாயங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். எல்லா முயற்சிகளும் தோல்வி கண்டபின் போருக்குச் செல்ல சர்வதேச நடைமுறை அனுமதிக்கிறது. 'தடுப்பு நடவடிக்கை' (PREVENTIVE ACTION) என்ற போர் மேற்கூறிய யாவற்றிற்கும் முரணானது. திருகோணமலைத் துறைமுகத்தின் மீதான தாக்குதலைத் தடுப்பதற்காகச் சம்பூரைக் கைப்பற்றும் போருபாயம் அபட்டமான ஆக்கிரமிப்பாகும்.


ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும், ஆக்கிரமிப்பாளனை வெளியேற்றுவதற்கும் சர்வதேசச் சட்டம் இடமளிக்கிறது. போர்மூலம் நாடுகளைக் கைப்பற்றி வைத்திருப்பதற்கு அதே சட்டம் இடம் தரவில்லை. என்றாலும் புதிய புதிய வடிவங்களில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்கிறது. தென்கிழக்கு ஆசியாவில் கொமியூனிசம் பரவுவதைத் தடுப்பதற்காக அமெரிக்கா வியட்நாமில் மிகக் கொடூரமான இராணுவத் தலையீட்டை மேற்கொண்டது. அதேபோல் ஈராக்கிலும் அமெரிக்கா மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை அழிப்பதற்காக என்று கூறி இன்றுவரை அங்கு தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறது. சிறிலங்காவின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் நிலைநாட்டுவதற்காக என்ற போர்ப் பிரகடனத்துடன் சிறிலங்கா இராணுவம் தமிழர் தாயகத்தின் மீது தாக்குதல் நடத்துகிறது. மக்களின் இன, மத, மொழி, பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய உணர்வு தட்டியெழுப்பப்படும்போது ஆக்கிரமிப்பை எதிர்க்கும் வலு உயர்வடைகிறது.

டிசம்பர் 27, 1979ஆம் நாள் சோவியத் ஒன்றியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தான் நாட்டிற்குள் புகுந்தன. அப்போதைய அதிபர் ஹபிசுல்லா அமீனைச் சுட்டுக்கொன்றனர். இப்பிராந்தியத்தில் அருகிவரும் சோவியத் ஒன்றிய ஆதரவைத் தூக்கி நிறுத்துவதற்காக இப் படையெடுப்பை அவர்கள் மேற்கொண்டனர். பத்துவருடம் நீடித்த இந்த ஆக்கிரமிப்பில் 1.3 மில்லியன் ஆப்கான் மக்களும் 15,000 ருஷ்யத் துருப்புக்களும் கொல்லப்பட்டனர். 5 மில்லியன் மக்கள் பாகிஸ்தானுக்குத் தப்பியோடினர். இன்றைய உலகில் பூதாகரமாக வளர்ச்சிபெற்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் சோவியத் ஒன்றியத்தின் படையெடுப்பு அதற்கு எதிரான இஸ்லாம் மதத்தினரின் புனிதப்போர் என்பவற்றிலிருந்து பிறப்பெடுத்தது. சூடான், செச்சென்யா, அல்ஜீரியா, இந்தோனேசியா, சவுதி அரேபியா போன்ற முஸ்லிம் நாடுகளில் பிறந்த இளைஞர்கள் சோவியத் படைகளுக்கு எதிராகப் போரிட அப்கானிஸ்தான் வந்தனர். இஸ்லாமுக்கு ஆபத்து, போரிட வாருங்கள் என்ற பிரசாரத்தை அமெரிக்கா மேற்கொண்டது. ஒசாமா பின்லாடனை ஆப்கானிஸ்தான் கொண்டுவந்தவர்கள் அதே அமெரிக்கர்கள்தான். தாம் வளர்த்த அடிப்படைவாதத்தின் பயனை அவர்களே அனுபவிக்கின்றனர்.

எவ்வகைப் போரிலும் படைக்கான ஆட்சேர்ப்பு மிக முக்கியம். தாமாகவே முன்வந்து படையில் இணைவோர் எண்ணிக்கை ஒப்பீட்டில் குறைவு. படையில் இணைவோரின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்காகப் பிரசாரம் தேவைப்படுகிறது. ஏற்கனவே படையில் இணைந்தோரின் மன வலிமையைக் கூட்டுவதற்காகவும் இணைவோமா விடுவோமா என்று மதில்மேல் பூனையாக இருப்போரைக் கவர்ந்து இழுப்பதற்கும் பிரசாரம் தேவைப்படுகிறது. பிரசாரம் பல வடிவங்களில் உருவாகியுள்ளன. மேடைப்பேச்சு, இசை, மேடை நாடகம், சலனப்படங்கள், திரைப்படங்கள், போஸ்ரர் எனப்படும் சுவரொட்டிகள் போன்றவை பிரசாரத்தில் பயன்படுகின்றன. இரண்டாம் உலகப் போர் காலத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆட்சேர்ப்பு அலுவலகங்களைத் திறந்து முப்படைக்கும் ஆட்சேர்ப்பு நடத்தினர். போஸ்ரர் விளம்பரங்கள் மிகவும் கவர்ச்சியாக உருவாக்கப்பட்டு முக்கிய இடங்களில் வைக்கப்பட்டன. அவற்றுள் சில சிறந்த கலையம்சத்துடன் விளங்குகின்றன. திரைப் படத்தையும் வானொலியையும் மேற்குநாடுகள் ஆட்சேர்ப்பிற்காகத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தின.

திரைப்பட நடிகர்களையும், நடிகைகளையும் ஆட்சேர்ப்புப் பிரசாரத்திற்கு உட்படுத்தும் வழமை இரண்டாம் உலகப்போரில் ஆரம்பித்தது. சிறந்த பாடகர்கள் துருப்புக்களை மகிழ்விப்பதற்காக இசைநிகழ்ச்சிகளை படை முகாம்களில் இலவசமாக நடத்தினர். பொப்ஹோப் (BOB HOPE) என்ற சிரிப்பு நடிகர் துருப்புக்களை மகிழ்விப்பதற்காக இரண்டாம் உலகப்போர் காலத்தில் பல சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். அமெரிக்க நடிகர்கள் படையில் சேர்ந்து இராணுவ சேவைக்குக் கவர்ச்சி அம்சத்தைச் சேர்த்தனர். 1962ஆம் ஆண்டின் இந்தோ - சீனப் போரில் இந்தியப் படையினருக்கு உற்சாகம் அளிப்பதிலும் நிதி திரட்டிக் கொடுப்பதிலும் இந்திய நடிகர்களும், பாடகர்களும் மொழி வேறுபாடின்றி உழைத்தனர்.

பெரும்போர் காலத்தில் மாதாந்த ஊதியத்திற்காகப் படையில் சேர்ந்தோர் எண்ணிக்கை நாட்டைப் பாதுகாக்க அல்லது போரை முன்னெடுக்கப் போதுமானதாக இருப்பதில்லை. இதை ஈடுசெய்வதற்காகக் கட்டாய இராணுவச்சேவைச் சட்டத்தின்மூலம் ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.


எவ்வகைப் போரிலும் படைக்கான ஆட்சேர்ப்பு மிக முக்கியம். தாமாகவே முன்வந்து படையில் இணைவோர் எண்ணிக்கை ஒப்பீட்டில் குறைவு. படையில் இணைவோரின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்காகப் பிரசாரம் தேவைப்படுகிறது. ஏற்கனவே படையில் இணைந்தோரின் மன வலிமையைக் கூட்டுவதற்காகவும் இணைவோமா விடுவோமா என்று மதில்மேல் பூனையாக இருப்போரைக் கவர்ந்து இழுப்பதற்கும் பிரசாரம் தேவைப்படுகிறது.

சட்டத்தின்மூலம் அமுலாக்கப்படும் இராணுவ சேவை 'டிராப்ற்' அல்லது 'கொன்ஸ்கிறிப்ஷன்' (DRAFT அல்லது CONSCRIPTION) எனப்படும். நாட்டை அரசு பாதுகாக்க வேண்டும். அதற்கு மக்கள் கட்டாயமாக உதவ முன்வரவேண்டும் என்பது இதன் அடிப்படைக் கருத்து. இஸ்ரேல் பெண்களுக்கும் கட்டாய இராணுவ சேவையை அமுலாக்கும் நாடு. 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நடந்த போர்களில் கட்டாய இராணுவசேவை புகுத்தப்படவில்லை. 18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் புரட்சியில் 'குடிமக்கள் எல்லோரும் நாட்டின் போர்வீரர்கள்' என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நெப்போலியன் வரலாறுகாணாத பெரும் படையைத் திரட்டுவதற்காக முழு அளவு கட்டாய இராணுவசேவையைப் புகுத்தினார்.

அமெரிக்கா 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்ட ஆண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியை அமுலாக்கும் சட்டத்தை 1792இல் நிறைவேற்றியது. ஆனால் நான்கு நாள் பயிற்சி மாத்திரம் வழங்கப்பட்டதால் இச்சட்டத்தின் வலு குறைவாக இருந்தது. 1903இல் இச்சட்டம் அகற்றப்பட்டது. 1860 - 1864இல் நடந்த அமெரிக்க உள்நாட்டுப் போரில் பிரிவினைகோரிப் போரிட்ட தென்மாநிலங்கள் 1862இல் கட்டாய இராணுவசேவையைப் புகுத்தின. அடுத்த வருடம், ஒன்றிணைந்த அமெரிக்காவைப் பாதுகாக்கப் போரிட்ட வடமாநில அதிபர் லிங்கன் தலைமையிலான அரசு கட்டாய இராணுவசேவைச் சட்டத்தை நிறைவேற்றி அமுலாக்கியது.

1914இல் தொடங்கிய முதலாம் உலகப் போருக்குப் பின் பல ஐரோப்பிய நாடுகள் கட்டாய இராணுவசேவையை அமுலாக்கின. பிரித்தானியா மாத்திரம் அதைத் தவிர்த்தது. தேவையான ஆட்களைச் சேர்ப்பதற்கு பிரித்தானியாவின் காலனிகள் இடமளித்தன. ஆனால் 1915இல் திடீரென்று பிரித்தானியா கட்டாய இராணுவ சேவைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. மே, 1917இல் அமெரிக்கா முதலாம் உலகப்போரில் பங்குபற்றத் தொடங்கியது. தெரிவுசெய்யப்பட்டோருக்கான கட்டாய இராணுவசேவைச் சட்டத்தைக் காங்கிரஸ் உடனடியாக நிறைவேற்றியது. மதம், மனச்சாட்சி ஆகிய காரணங்களுக்காக ஆயுதம் ஏந்த விருப்பமில்லாதவருக்கு இச்சட்டம் விதிவிலக்கு அளித்தது. 17 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்ட ஆண்கள் அனைவரும் கட்டாய இராணுவசேவைக்கு அழைக்கப்பட்டனர். இச்சட்டத்தின் கீழ் 24 மில்லியன் அமெரிக்கர்கள் பதிவுசெய்யப்பட்டனர். 2,800,000பேர் மாத்திரம் களத்திற்கு அனுப்பப்பட்டனர். போர் முடிந்தபின் சட்டம் கிடப்பில் போடப்பட்டது.

1939இல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. 1941வரை அமெரிக்கா பிரித்தானியாவுக்கு ஆதரவு வழங்கினாலும் நேரடியாகப் போரில் பங்குபற்றவில்லை. அமெரிக்க வரலாற்றில், 1939 - 1941 வரையிலான வருடங்களில் அமைதிகாலக் கட்டாய இராணுவசேவைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சில குறிப்பிட்ட துறையினருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. சிலர் நன்கு திட்டமிட்டு இராணுவசேவையில் இருந்து விலகிநின்றனர். இவர்கள் டிராப்ற் - டொஜர்கள் (DRAFT - DODGERS) என்று இன்றுவரை கேலி செய்யப்படுகின்றனர். இப்போதைய ஜனாதிபதி புஷ், முன்னாள் ஜனாதிபதி கிளின்ரன் இதில் அடங்குவார்கள். அதிபர் கெனடி கடற்படையில் இணைந்து படுகாயம் அடைந்தவர். இதே காலத்தில் கனடாவும் கட்டாய இராணுவசேவைச் சட்டத்தை நிறைவேற்றி அமுலாக்கியது.

**- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -**

பேர்ள் துறைமுகத்தின் மீதான ஜப்பானின் திடீர்த்தாக்குதல் (07, டிசம்பர், 1941) அமெரிக்காவில் எப்போதும் தயார் நிலையில் இருக்கவேண்டிய அவசியத்தை உணர்த்தியது. இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்பும் அமெரிக்கா 1948, 1951, 1955, 1959ஆகிய வருடங்களில் புதிய கட்டாய இராணுவசேவை சட்டங்களை நிறைவேற்றியது. இன்று 18வயதை எட்டிய ஒவ்வொரு அமெரிக்க ஆணும் அண்மையிலுள்ள கட்டாய இராணுவசேவைப் பதிவகத்தில் தன்னைப் பதிவு செய்யவேண்டும். பிள்ளைகள் உள்ள திருமணமானவர்கள், சில குறிப்பிட்ட அரச அதிகாரிகள், 'கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சேவைகளில் ஈடுபடுவோர், உடல்வலு, மூளை வலுவிழந்தோர் விதிவிலக்களிக்கப்படுகின்றனர். மதம் மற்றும் மனச்சாட்சிக் காரணங்களுக்காக ஆயுதம் ஏந்த விரும்பாதவர்கள் இராணுவ மருத்துவமனைகள் போன்றவற்றில் பணியாற்றவேண்டும். இவ்வாறு 18வயதில் பதிவுசெய்வோருக்கு இருவருட இராணுவப் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்தபின் அவர்கள் சிவில் வாழ்க்கைக்குத் திரும்புவார்கள். ஆனால் அவர்கள் பெயர் 'றிசேவ்ட்' (RESERVED) படையினர் பட்டியலில் இருக்கும். பெரும் நெருக்கடிக் காலத்தில் அவர்கள் சேவைக்கு அழைக்கப்படுவார்கள். சிவில் வாழ்க்கை நடத்தும் இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் றிசேவ்ட் படை உறுப்பினராவர்.

இரண்டாம் உலகப்போரில் பங்குபற்றப் பெருமளவு அமெரிக்க ஆண்கள் வெளிநாடு சென்றபடியால் அமெரிக்காவின் ஆயுதத் தொழிற்சாலைகளை இயக்குவதற்குத் தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை அமெரிக்கப் பெண்கள் இட்டு நிரப்பினர். பீரங்கிகள், தாங்கிகள், போர்விமானங்கள், கப்பல்கள் கட்டும் தொழிற்சாலைகளில் ஆறு மில்லியன் அமெரிக்கப் பெண்கள் சேவையில் ஈடுபட்டனர். இவர்கள் அனைவரும் 'றோசிகள்' (ROSIES) என்று அன்பு கலந்த மரியாதையுடன் அழைக்கப்பட்டனர். 'ஆணியை அடித்துத் தறையும் றோசிகள்' (ROSIES THE RIVETERS) என்பது இவர்களுடைய முழுப்பெயர். றோசிகளின் எழுச்சிக்குப் பின் அமெரிக்கப் பெண்களின் தொழில்வாய்ப்புக்கள், பெண்கள் சம்பந்தமான தொழிற்சட்டங்கள், பெண்களுக்கான தொழிற்சாலை ஊதியம் என்பவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. உடலுழைப்பில் ஆண்களைப் பெண்கள் விஞ்சுவர் என்று போர்க்கால அனுபவம் உணர்த்துகிறது. சோவியத் ஒன்றியப் பெண்கள் போரில் நேரிடையாகப் பங்குபற்றி வீரவரலாறு படைத்தனர்.

சட்டம் இயற்றி அதனூடாக இராணுவ சேவைக்கு ஆட்சேர்க்கும் வழமையைவிட இன்னுமோர் வகை வலுக்கட்டாய ஆட்சேர்ப்பு, ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரித்தானியாவில் இருந்துள்ளது. இளைஞர்களை அவர்களுடைய வாழ்விடங்கள், பணியிடங்கள் போன்றவற்றிலிருந்து சிறைப்பிடித்துப் படையில் சேர்ப்பார்கள். அரசிடம் இரகசியமாகப் பணம்பெறும் குழுக்கள் இதைச்செய்தன. பல இளைய வயதினர் இவ்வாறு காணாமல் போவது வழமை. பிரித்தானியக் கடற்படையில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் பணியாற்றினர். தப்பியோடினால் துரத்திப் பிடிக்கும் வழமையும் இருந்தது. அமெரிக்காவின் மூன்றாவது அதிபர் தோமஸ் ஜெபர்சன் காலத்தில் (1801 - 1809) அமெரிக்கக் கப்பல்களைப் பிரிட்டிஷ் கடற்படையினர் நிறுத்தி தப்பியோடியோரைத் தேடியுள்ளனர். பிறநாட்டு இளைஞர்களையும் சிறைப்பிடித்து தமது கடற்படையில் இணைக்கும் வழக்கத்தைப் பிரிட்டிசார் கொண்டிருந்தனர். 19ஆம் நூற்றாண்டின் முதல் கால்பங்கு காலம்வரை இப்படியான படைக்குச் சிறைப்பிடிக்கும் வழக்கத்தை மேற்குநாடுகள் கொண்டிருந்தன. அதில் பிரித்தானியா முதலிடம் வகித்தது.

எமது படைபலத்தையும் தாக்குதல் திறனையும் எதிரிதான் தீர்மானிக்கிறான் என்ற இராணுவக் கோட்பாடு நிலவியது. வாழும் முனைப்புள்ள இனம் எதிரியின் தாக்குதலுக்கு முகங்கொடுக்கும் விதத்தில் தனது வலுவைப் பெருக்குகிறது. எதிரியின் தாக்குதலுக்கு நிகராகத் தன்னைப் பலப்படுத்தவேண்டிய தேவை அதற்கு இருக்கிறது. வியட்நாம் போரை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை, விமான குண்டுவீச்சுச் செறிவு, குண்டுகளின் எடை என்பவற்றை உயர்த்தியபோது தாக்குதலை எதிர்கொள்வதற்கு முழுநாடும், மக்களும் தயாராகின. அமெரிக்கா சில சண்டைகளில் வென்றிருக்கலாம், இறுதி வெற்றி வியட்நாம் மக்கள் பக்கமே. தாக்குப் பிடிக்கும் வலு ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுக்கு இல்லையென்றால் அழிவு நிச்சயம்.




www.eelamview.com

www.eelamview.com



அடர்ந்த காடு அதற்குள்ளால் நடைபயணம். கடக்கவேண்டிய தூரம் நினைத்துப்பார்க்க முடியாதது. ஆனால் கடந்தாக வேண்டும். நினைத்தவுடன் தண்ணீர் குடித்தவன் பசித்தவுடன் வயிறு நிரப்பிக் கொண்டவன். இந்தப் பயணம் முடியுமட்டும் இவை கிடைக்குமா இல்லையா என்றும் தெரியாமல் எப்படித்தான் பயணிப்பது? அவனது கால்கள் இந்தப் பயணத்திற்கு ஒத்தழைக்குமா என்பதற்கு எந்த ஆதாரங்களுமில்லை. அவன் எப்படித்தான் அடியெடுத்துவைப்பது? இப்போதுதானே அவன் போராளியாகியிருந்தான். பயிற்சிகளை இனித்தான் பெற வேண்டும். அந்தப் பயிற்சிகளைப் பெறவேண்டுமாயின் இந்தப் பயணம் முடிந்தாகவேண்டும். மணிவண்ணன் எதற்கும் அஞ்சியவனல்ல. அவனிடம் துணிவு என்பது ஏராளமாக இருந்தது. அது ஒன்றே அவன் மட்டக்களப்பிலிருந்து வன்னிவரை பயிற்சிக்காகப் பயணிப்பதற்குத் துணைபுரிந்தது. இந்தப் பயணத்தில் மட்டுமல்ல மணி



மண்ணின் மகனாக 30.09.1975

மாவீரனாக 04.11.1999

## லெப்.கேணல் மணிவண்ணன்,

(தங்கவேல் ரகுராம்)

இம்ரான் பாண்டியன் படையணி

விபுலானந்தா வீதி, வாழைச்சேனை, மட்டு




# "வெல்வோம் அல்லது வெற்றிக்காக வீழ்வோம்"

"நான் பிடிச்ச இடத்தில ஒரு அங்குலம்கூட விட்டுக்கொடுக்கமாட்டன் கடைசிவரை சண்டைபிடிப்பன்" அவன் சொன்னதுபோலவே அந்த அசாத்திய துணிச்சல்மிக்க வீரன் தான் முன்னேறிய இடத்தில் நின்றபடியே சமரிட்டு மடிந்தான்... அந்த அமைதியான போர்வீரன் 'வெற்றி அல்லது வெற்றிக்காக வீழ்தல்' என்ற தன் வாதத்தினைச் செயலில் மெய்ப்பித்தான்.

வண்ணனின் போராட்டப்பயணம் முழுவதிலும் துணிச்சலும் வீரமும் ஓயாத உழைப்பின் வடுக்களும்தான் நிறைந்திருக்கின்றன.

ஜெயசிக்குறு படைநகர்வை எதிரி மேற்கொண்டிருந்த காலம். ஓய்ந்திராமல் போராளிகள் சமரிட்ட நாட்கள். புளியங்குளத்தில் வலிமையான ஒரு தடுப்புச்சமர். ஒரு வாழ்வுக்காக சாவின் கனதியைப் புறந்தள்ளிவிட்டு எதிரியுடன் மோதிய நாட்கள். 19.08.2006இன் காலைப்பொழுது. ஒரு சமர் மூளப் போவதற்கான அறிகுறிகள் அப்பட்டமாய்த் தெரிந்தன. எறிகணைகளின் இரைச்சல்களும் அவை வெடித்துச் சிதறும் அதிர்வுகளும் செவிப்பறைகளைத் துளைத்தன. காப்பரண்களில் நின்ற வீரர்கள் தங்கள் துப்பாக்கிகளைச் சுடும் நிலைக்குக்கொண்டுவந்தனர். அப்போது ஒரு சம்பவம் நடந்தது. எதிரியின் கவச டாங்கிகள் சடுதியாக எங்கள் காப்பரண்களை ஊடறுத்து உள் நுழைகின்றன. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பழைய வாடிப்பகுதியால் ஊடுருவிய டாங்கிகளும் துருப்புக் காவிகளும் ஏ–9 நெடுஞ்சாலையில் ஏறி புளியங்குளத்தில் புலிகளின் கட்டளைத் தளபதி தரித்திருந்த பக்கமாய்ச் சென்றன. கொஞ்ச நேரத்திற்குள் புலிவீரர்கள் சுதாகரித்துக்கொண்டார்கள். சண்டை இப்போது முகாமுக்கு உள்ளும் வெளியுமாக எல்லா இடமும் நடந்தது. காப்பரண்களில் இருந்தோர் தங்கள் நிலைகளை விட்டுவிடாமல் இருக்க கடும்சமர் புரிந்தார்கள். விசேட கவச எதிர்ப்புப் போராளிகள் முகாமுக்குள் டாங்கிகளைத் தேடினார்கள். தனது அணியுடன் தூரத்தே நின்ற மணிவண்ணன் சண்டை நடந்த பகுதிக்கு ஓடிவந்துகொண்டிருந்தான். எறிகணைகள் அந்த அணியை நகரவிடாமல் தடுத்தன. பலமுறை நிலத்தில் விழுந்தார்கள். மணிவண்ணன் சாதுரியமாக டாங்கி வந்த பகுதிகளுக்குத் தனது போராளிகளைக் கூட்டிச் சென்றான். டாங்கிகள் உண்மையிலேயே பலமானவை. துல்லியமான தாக்குதிறன் கொண்டவை. வேகமாக இலக்கை இனங்கண்டு தாக்கக்கூடியவை. இந்த டாங்கிகளின் கண்ணுக்குள் வெட்டவெளியில் இனங்காணப்பட்டு விட்டோமானால் அது இலகுவாக எம்மை இல்லாதொழிக்கும். எனவே கொஞ்ச நேரத்திற்குள் யார் முந்துகிறார்களோ அவர்கள்தான் வெல்ல முடியும். மணிவண்ணன் தனது போராளிகளைத் தந்திரோபாயமாக நகர்த்தியபடி நகர்ந்து எதிரியின் டாங்கியைக் குறிவைத்துத் தாக்கினான். போராளி ஒருவனின் ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்தியை வாங்கித் தானே ஒரு டாங்கியை அடித்தான். மணிவண்ணன் முந்திக்கொண்டதால் உலகின் வல்லரசுகளின் உருவாக்கத்தில் வந்த அசைக்கமுடியாக் கவசம் தனது அத்தனை செயற்திறன்களையும் இழந்து அப்பாவித்தனமாய் எரிந்துகொண்டிருந்தது. இன்னுமொரு டாங்கியையும் புலிவீரர்கள் அடித்து எரித்தார்கள். ஒரு துருப்புக்காவும் கவசவாகனம் எம்மிடம் சரணடைந்துகொண்டது. அதிலிருந்து இறங்கியோடிய இராணுவச் சிப்பாய்களைத் தப்பிச்செல்ல அனுமதிக்காமல் களத்திலேயே அவர்களைச் சுட்டு வீழ்த்தினார்கள். எரிந்த டாங்கிகளுடன் சேர்ந்து இராணுவத்தின் முன்னேறும் கனவு எரிந்துபோனது. அன்றைய நாளில் காலடிக்குள் எதிரி வந்தபோது அவன் துவம்சம் செய்யப்பட்டான். இந்த நாளின் வெற்றிக்கு மணிவண்ணனின் துணிச்சலும் மதிநுட்பமான சண்டைத்திறனும் முக்கிய காரணமாக அமைந்தது.

ஒரு அணித்தலைவன் தனியே சண்டைகளை மட்டும் வழிநடத்துபவன் அல்ல. அவன்தான் தனக்குக் கீழுள்ள போராளிகளுக்கு எல்லாமுமாகிறான். விசேட கவச எதிர்ப்பு அணிப் போராளிகளுக்கு முகாமில் பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். பயிற்சிகளோ கடுமையானவை. சில வேளைகளில் களைப்பில் நாக்குத் தொங்கும். ஆனால் இவை போராளிகளை வருத்துவதற்காக அல்ல. சண்டைக் களங்களில் தங்கள் உயிர்களை வீணே இழந்துவிடாமல் இருப்பதற்காகவே. இந்தப் பயிற்சிகளால் ஏற்படும் உடற்சோர்வைப் போக்க ஏதாவது நல்ல உணவு கொடுக்கவேண்டுமென்றால் சமையற் கூடத்தில் மணிவண்ணன் நிற்பான். அவனே கறிசமைப்பான். போராளிகளுக்குச் சுவையான சாப்பாடு கொடுப்பான். அப்போது அவன் ஒரு அணித்தலைவனாக அல்ல. ஒரு தாயாகவே இருப்பான். அவன் வெளிப்படுத்தும் பாச உணர்வுகூட ஒரு தாய்க்கு நிகரானது.

1998 இரண்டாம் மாதத்தின் முதலாம் நாள். கிளிநொச்சியில் அமைந்திருந்த எதிரியின் படைத்தளம் மீது ஒரு வலிந்த தாக்குதல் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஏனைய படையணிகளுடன் சேர்ந்து விக்டர் விசேட கவச எதிர்ப்பு அணியும் களமிறங்கியது. சண்டைகள் உக்கிரமாக நடந்தது. எதிரியின் அரண்களை ஊடறுத்து உள்நுழைந்த அணிகள் மூர்க்கமாகச் சண்டையிட்டன. விசேட கவச அணியின் இன்னொரு அணித்தலைவன் நவச்சந்திரனின் அணி எதிரியின் முகாமிற்குள் முற்றுகையிடப்படுகின்றது. தொலைத்தொடர்புக் கருவியில் நவச்சந்திரனின் குரல் ஒலிக்கின்றது. "நாங்கள் கடைசி வரைக்கும் சண்டை பிடிப்பம்" இது நவச்சந்திரனின் குரல். அந்த அணிக்கு ஏதோ நடக்கப்போகின்றது என்பதை மணிவண்ணனால் உணரமுடிந்தது. கைகளைப் பிசைந்தான். அந்தச் சூழலில் அவனால் எதுவும் செய்யமுடியவில்லை. காலை தொடங்கிய சண்டை மாலைவரை எதிரியின் முகாமிற்குள் நடந்தது. கொஞ்சநேரத்தில் மீண்டும் தொலைத்தொடர்புக் கருவியில் நவச்சந்திரனின் குரல் ஒலித்தது. "20 மீற்றரில ஆமி. என்னட்ட ஒண்டுமில்ல புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற வார்த்தைகளோடு நவச்சந்திரனின் குரல் அடங்கிப்போனது. மணிவண்ணனின் இதயம் கனத்தது. போராட்ட வாழ்வில் இருவரும் ஒன்றாகியவர்கள். நீண்ட கள வாழ்க்கையில் ஒன்றாய்ச் சாதித்தவர்கள். வேதனைகளைத் துயரங்களைக் கடந்து போராட்டப் படகில் ஒன்றாய்ப் பயணித்தவர்கள். இன்று நவச்சந்திரன் இல்லாமல் போய்விட்டான். அவனோடு சேர்ந்து ஒன்பது வீரர்களை கவச எதிர்ப்புக் குடும்பம் இழந்தது. இழப்பின் துயரம் நெருப்பின் வெப்பக் கனலை அவனுக்குள் உருவாக்கியது. இந்த வலியை இன்னும் வலிமை உள்ளதாய் எதிரிக்குப் புகட்டவேண்டும். அவன் இன்னுமொரு களத்திற்காகக் காத்திருந்தான்.

20.04.1998. அது ஒலுமடுவில் ஜயசிக்குறுப் படையினருக்கு எதிரான விடுதலைப்புலிகளின் தடுப்பு வேலி. இன்று எதிரி முன்னகரப் போகின்றான். மணிவண்ணன் தனது கவச அணிப் போராளிகளுடன் எதிரியின் டாங்கிகளுக்காகக் காத்திருந்தான். காலை 7.00 மணி. சமருக்கான அறிகுறியாய் எறிகணைகள் கணக்கற்ற விதத்தில் அந்த நிலம் முழுவதும் விழுந்து சிதறிக்கொண்டிருந்தது. பேரிரைச்சலுடன் 20ற்கு மேற்பட்ட டாங்கிகளும் துருப்புக் காவிகளும் அவர்களுடன் சேர்ந்து துருப்புக்களும் முன்னகர்ந்தன. டாங்கிகள் நெருப்பைக் கக்கித்தள்ளின. அவை போராளிகளின் காப்பரண்களைச் சல்லடைபோடத் தொடங்கின. போராளிகளின் காப்பரண்களுக்கு மிக நெருக்கமாகவும் காப்பரண்களுக்கு மேலாகவும் டாங்கிகள் நகர்ந்தன. அங்கிருந்த போராளிகள் குண்டு மழைக்குள் நனைந்தபடி சமரிட்டார்கள். மணிவண்ணன் தன் அணியை வழிநடத்தி டாங்கிகளைத் தாக்கினான். ஆர்.பி.ஜியால் டாங்கிகளைத் தாக்கினார்கள். அருகில் வந்தபோது எறிகுண்டைக் கழற்றி வீசினார்கள். எதிரியின் குண்டுபட்டுக் களத்திலே வீழ்ந்தார்கள். எல்லாம் முடிந்து களம் ஓய்விற்கு வந்தது. எதிரி தன் கவசங்களோடு ஓட்டம் எடுத்தான். மூன்று டாங்கிகள் எரிந்தழிந்தன. இரண்டிற்கு மேற்பட்ட டாங்கிகள் சேதமடைந்தன. பல படையினர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் மணிவண்ணனின் சாதனையிருந்தது. ஆனாலும் அவன் நிறைவடையவில்லை. இன்னும் இன்னும் சாதிக்கத் துடித்தான்.

அவன் துடிப்பிற்கேற்ப இன்னுமொரு களம் அவனுக்குக் கிடைத்தது. அவன் எதிர்பார்த்திருந்த களம் இதுதான். நவச்சந்திரன் மடிந்த அதே கிளிநொச்சித் தளம்மீது மீண்டும் ஒரு படைநடவடிக்கை. தலைவரின் திட்டம் தளபதிகளால் விளக்கப்படுகின்றது. கிளிநொச்சித் தளத்தை வீழ்த்துவதற்காகப் பரந்தனிற்கும் கரடிப்போக்கிற்கும் இடையில் எதிரியின் எல்லைக்குள் ஊடறுத்து நின்று, முன்னும் பின்னுமாக வரும் எதிரியைத் தாக்கியழிக்கும் நடவடிக்கைக்குக் கவச டாங்கிகளைத் தாக்குவதற்காக விக்டர் விசேட கவச எதிர்ப்பு அணியும் தெரிவுசெய்யப்பட்டது. நவச்சந்திரன் உட்பட அறுபதிற்கும் மேற்பட்ட போராளிகள் மடிந்த அதேயிடம். சண்டை தொடங்கியதும் அணி உள் நுழையும் பாதையில் நின்றவாறு அணியை வழி நடத்தும்படி அவனுக்குச் சொன்னபோது அவன் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. நவச்சந்திரன் எந்தக் கவசங்களை அழிக்கச்சென்று அந்தக் கனவோடு மடிந்தானோ அதே கனவை அந்த மண்ணில் அதேயிடத்தில் வைத்து நிறைவேற்றாமல் திரும்புவதில்லை என உறுதியாகத் தெரிவித்தான். அவனிடம் இரண்டு தெரிவுகள் மட்டும்தான் இருந்தன. வெற்றி அல்லது வெற்றிக்காக வீழ்வது.

26.09.1998இன் அதிகாலைப் பொழுதில் கிளிநொச்சிப் படைத்தளம் மீது பாரிய தாக்குதல் தொடங்கியது. முகாமில் எல்லா முனைகளிலும் சண்டை தொடங்கியது. சமநேரத்தில் எதிரியின் முன்னரண்களைத் தாக்கி ஊடறுத்து நிலைகொள்ளும் அணிகள் உள்நுழைகின்றன. துப்பாக்கி ரவைகள் பல முனைகளில் இருந்து போராளிகளைக் குறிவைத்தபோதும் அவர்கள் இலக்குநோக்கி நகர்ந்தார்கள். மணிவண்ணன் தனது கவச எதிர்ப்புப் போராளிகளுடன் நகர்ந்து பரந்தனிற்கும் கரடிப்போக்கிற்கும் இடையில் நிலைகொண்டிருந்த போராளிகளுடன் தனது அணியையும் நிலைப்படுத்தினான். சண்டை உக்கிரமாய் நடந்தது. முன்பக்கமாய் முன்னேறிய புலிகளின் அணிக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் கிளிநொச்சிப் படைத்தளம் ஊசலாடிக்கொண்டிருந்தது. இரண்டாம் நாள் கடந்து மூன்றாம் நாள் (28.09.1998) காலை ஒன்பது மணியளவில் பரந்தன் படைத்தளத்திலிருந்து பாரிய தாக்குதலைத் தொடுத்தவாறு டாங்கிகள் சகிதம் படையினர் முன்னேறினர். துண்டாடப்பட்டிருக்கும் கிளிநொச்சிப் படைத்தளத்தை மீண்டும் இணைத்துக்கொள்வதுதான் அவர்களின் திட்டம். ஊடறுத்து நிலைகொண்டிருந்த அணிகளை டாங்கிகளும் துருப்புக்களும் நெருங்கித் தாக்கின. வாழ்விற்கான ஒரு சண்டை அதில் நடந்தது. மணிவண்ணன் தனது அணியைத் தயார்ப்படுத்திச் சண்டையிட்டான். போராளி ஒருவனின் ஆர்.பி.ஜி உந்துகணையைத் தானே வாங்கி ஓடிச் சென்று நிலையெடுத்து டாங்கியைத் தாக்கியழித்தான். எல்லாப் போராளிகளினதும் கடுமையான தாக்குதலால் இரண்டு டாங்கிகளை இழந்ததும் பரந்தனில் இருந்து முன்னேறிய படையினர் பின்வாங்கி ஓடினர். இந்தத் தோல்வியால் நிர்க்கதியான கிளிநொச்சிப் படைத்தளப் படையினர் அன்று மாலையே படைத்தளத்தைவிட்டு ஓட்டமெடுத்தனர். புற்றிலிருந்து புறப்படும் ஈசலைப் போல் படையினர் ஓடிவந்தனர். ஓடிவந்த படையினரை, ஊடறுத்துக் காத்திருந்த புலிவீரர்கள் துவம்சம் செய்தனர். தங்கள் துப்பாக்கிகளில் சன்னங்கள் முடியும் வரை படையினரைக் கொன்றொழித்தனர். இறுதியில் கைகலப்புச் சண்டையாக அது மாறியது. பல புலிவீரர்கள் உயிர்கொடுத்த இந்தச் சமரில் மணிவண்ணன் குண்டுச் சிதறலில் விழுப்புண் பட்டான். ஆனால் அவன் நினைத்ததைச் சாதித்தான். நவச்சந்திரனும் அறுபதிற்கும் மேற்பட்ட புலிவீரர்களும் மடிந்த அதே இடத்தில் 200இற்கு மேற்பட்ட படையினரைச் சுட்டு வீழ்த்தியதுடன் இன்னும் உச்சமாய் நவச்சந்திரனின் அணி பயன்படுத்திய ஆயுதங்கள் அங்கிருந்த மினி முகாம் ஒன்றிலிருந்து பத்திரமாய் மீட்கப்பட்டது. இந்த மீட்பு நவச்சந்திரனுக்கு அவன் தீர்த்த நன்றிக் கடன் போன்றிருந்தது.

மணிவண்ணன் இப்படித்தான் களங்களில் வாழ்ந்தவன். அதிகம் பேசாத அமைதியான தோற்றம். அவன் பேசிக்கழித்த நாட்களைவிட செயலில் சாதித்த நாட்கள்தான் அதிகம். 1998ஆம் ஆண்டு கடைசி மாதம். ஒட்டுசுட்டான் பகுதியை நோக்கி சிங்களப் படைகள் முன்னேறின. முகாமில் பயிற்சியில் நின்ற மணிவண்ணன் ஒரு தாக்குதல் அணியை வழிநடத்திக்கொண்டு முன்னேறும் படைகளைத் தடுத்து நிறுத்தும் சண்டையில் ஈடுபட்டான். அன்றிலிருந்து அவனது வாழ்க்கை முழுமையாய்க் களத்தில்தான். காடுகளுக்குள் நின்றபடி இயற்கையின் எல்லாவிதமான அசைவுகளுக்கும் முகம்கொடுத்தான். மழை, பனி, சேறு, சகதி, முட்கள், பற்றைகள் என எல்லாவற்றிற்குள்ளும் வாழ்ந்தான். அடிக்கடி மூழும் சண்டைகளுக்குள் உயிர்பிரியும் கணம்வரை சென்றுவந்தான். ஒரு சிறு அணியுடன் களம் வந்தவன் களத்தில் ஒரு கொம்பனி மேலாளராக வளர்ந்தான். இந்த நீண்ட கள வாழ்க்கையில் அவன் ஓய்விற்காக முகாம் திரும்பியதேயில்லை.

ஓயாத அலைகள்–03 பெரும் பாய்ச்சல் ஜயசிக்குறுப் படைமீது தொடங்கியது. படைத்தளங்கள் புலிகளிடம் சடுதியாய்ச் சரிந்துவீழ்ந்தன. மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம் என தொடர்ந்த சண்டைகளில் ஒதியமலைப் பகுதிகளில் தனது அணியுடன் இடங்களை மீட்டபடி முன்னேறினான். எதிரி ஓடிக்கொண்டிருந்தான். சண்டை ஓரிடத்தில் இறுக்கமடைந்தது. எதிரி தனது கவசங்களை ஒருங்கிணைத்து இழந்த இடங்களைக் கைப்பற்ற முன்னேற முயற்சித்தான். விடுதலைப்புலிகளின் மோட்டார் எறிகணை வீச்செல்லையையும் தாண்டி மணிவண்ணன் முன்னேறியிருந்தான். மணிவண்ணன் மோட்டார் எறிகணை உதவிகேட்டான். ஆனால் அந்த எறிகணை செலுத்தியை முன்னகர்த்த முனைந்தபோது அதைக் கொண்டுசென்ற வாகனம் கண்ணிவெடியில் சிக்கியது. மணிவண்ணனின் அணி மோட்டார் எறிகணையின் சூட்டாதரவை இழந்தபோது அவன் தொலைத்தொடர்புக் கருவியில் உறுதியாய்த் தெரிவித்தான் "நான் பிடிச்ச இடத்தில ஒரு அங்குலம்கூட விட்டுக்கொடுக்கமாட்டன் கடைசிவரை சண்டை பிடிப்பன்" அவன் சொன்னதுபோலவே அந்த அசாத்திய துணிச்சல் மிக்க வீரன் தான் முன்னேறிய இடத்தில் நின்றபடியே சமரிட்டு மடிந்தான். தன் தேசத்திற்குத் தன் இயலுமைக்கும் அதிகமாய்ச் சாதித்த அந்த அமைதியான போர்வீரன் வெற்றி அல்லது வெற்றிக்காக வீழ்தல் என்ற தன் வாதத்தினைச் செயலில் மெய்ப்பித்தான்.

**ச.புரட்சிமாறன்**



www.eelamview.com

www.eelamview.com




# 'நினைவின் அதிர்வுகள்'

– தூயவன் –



மூன்று நாட்களாக தொடர்ந்து பணியாற்றியதால் அந்த சத்திரசிகிச்சை நிபுணர் மிகவும் களைப்படைந்து காணப்படுகிறார். வேலைப்பழு, சம்பவங்களின் தொடர் விளைவுகள் பற்றி எண்ணுவதையும் அதனால் உருவாகும் மன உளைச்சலையும் தடுத்திருந்தது என்பது உண்மையே. இரவு சில மணித்தியாலங்கள் செய்த நித்திரை சிறிது புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இவர் அங்கம் வகிக்கும் மருத்துவக்குழுவினர் களத்தில் காயமுற்ற போராளிகளில் பலருக்கு அவசர போர்ச் சத்திரசிகிச்சையைச் செய்திருந்தனர். அதனைத் தொடர்ந்து செஞ்சோலை வளாகத்தில் கிபிர் குண்டுவீச்சில் காயமடைந்த கல்லூரி மாணவிகளுக்கும் சிகிச்சை அளித்திருந்தனர். தேசத்தின் தளிர்கள் கருகிய அக்காட்சிகள், திரும்பத் திரும்ப மனதில் வலிந்து விபரங்களையும் குறித்துக் கொள்கின்றார். காயத்தின் தன்மையையும், அதன் விளைவுகளையும் நோயாளிக்கு விளங்கப்படுத்துகின்றார். விரைவாகக் குணமடைய அவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதையும் கூறுகின்றார். றண காயங்களை மீண்டும் மீண்டும் நினைவிற்குக் கொண்டுவருவது பழகிய விடயமாகத்தான் இருந்தது. எனினும் எதிர்காலத்தை மகிழ்வாகச் சிந்திக்கும் மாணவிகளின் யதார்த்த நிலை மாறியதை ஜீரணிக்க முடியவில்லை. உணர்வுகளுக்கு உட்படாமல் கடமைசார் தீர்மானங்களை எடுக்கத் துறைசார் அறிவும், அனுபவமும் பயிற்றுவித்திருந்தது. எனினும் அதற்கும் இப்பொழுது பெருமுயற்சி எடுக்கவேண்டியுள்ளது.

கட்டிலில் படுத்திருக்கும் அடுத்த நோயாளிக்கு அருகில் உழன்றுகொண்டிருந்தார். கட்டிலில் வைத்திருந்தால் விழுந்துவிடுவார் என்பதால் நிலத்தில் மெத்தைபோட்டுக் கிடத்தப்பட்டிருந்தார். அரைத்திண்ம உணவு ஊட்டப்படுவதற்காக றப்பர் குழாய் ஒன்று மூக்குத் துவாரத்தினூடு இரைப்பையினுள் செலுத்தப்பட்டிருந்தது. தலைக்காயம் சார்பான எதிர்வு கூறல்களைச் செய்வது கடினமானது. தப்புவார் என எதிர்பார்க்கப்படும் காயக்காரர்கள் இறப்பதும், இறப்பார் என எதிர்பார்க்கப்படும் பாரிய காயக்காரர்கள் உயிர் பிழைப்பதும் அடிக்கடி நிகழ்வது. உடல் உறுப்புக்களில் அதிகம் அறியப்படாத பகுதியாக இருப்பது மூளையின் இயக்கமே. இவ்வகைக் காயக்காரரைக் குறித்த ஒழுங்குமுறைப்படி பராமரித்தல் அவசியமானது. முன்னேற்றம் ஏற்படாத காயக்காரர்களைத் தொடர்ந்து கவனிக்கையில் பராமரிப்பின் தரத்தில் சோர்வு ஏற்படுவது இயல்பானது. இதனைத் தவிர்ப்பதற்காக மீண்டும் மீண்டும் மீள் வலியுறுத்தல் செய்யப்படுவது அவசியமானது. அதனை உறுதிப்படுத்தியவர் அடுத்த நோயாளி நோக்கி நகர முற்படுகிறார்.




அவல அதிர்வை ஏற்படுத்தியவண்ணம் உள்ளது. தனது இருபதுவருட மருத்துவப் போராட்டத்தில் காணாத சோகத்தைச் சந்தித்ததாகக் கருதினார். மருத்துவக் கல்லூரியைத் தான் தெரிவுசெய்யாமல் விட்டிருந்தால் சோகங்களைக் குறைவாகச் சந்திக்கும் தனிப்பட்ட வாழ்வை ஏற்படுத்தி இருக்கலாமோ எனும் சிறு தடுமாற்றத்தையும் தன்னுள் உணர்ந்தார்.

இவ்வாறு பலதும் பத்தும் யோசித்துக்கொண்டிருக்கையில் புலம்பெயர் தேசத்து நண்பனின் கடிதம் ஒன்று வாசிக்கப்படாமல் இருப்பது ஞாபகம் வந்தது. அதனை எடுத்து வாசிக்கத்தொடங்கினார். "... நீ இங்கு வந்தால் உன் அனுபவத்திற்கு உடனடியாக வேலைகிடைக்கும். உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன்..." எனத் தொடரும் வாசகங்களை ஆர்வமின்றியே வாசிக்கின்றார். "...எனினும் நீ நாட்டைவிட்டு இங்கு வா எனக் கேட்பது நான் போராட்டத்திற்குச் செய்யும் துரோகம். அதேவேளை அங்கு பணியாற்றி கடின வாழ்வை அனுபவி என்பதும் நடப்பிற்கு நல்லதல்ல. நீ எடுக்கும் முடிவிற்கு எனது வாழ்த்துக்கள்..." என கடிதம் முடிந்த விதம் அவன்மீது நன்மதிப்பை ஏற்படுத்தியது.

"டொக்டர் வோட் ரவுண்ட் போவோமா..." விடுதி மருத்துவ நேரம் சரியென்பதை ஞாபகம் ஊட்டுகின்றார். இவர் தலையாட்டி சம்மதம் தெரிவித்து ஓய்வறையில் இராது புறப்படுகின்றார். ஒவ்வொரு நோயாளியாகப் பார்வையிடுகின்றனர். சத்திரசிகிச்சைக் குறிப்பை எடுத்துப் பார்க்கிறார். சத்திரசிகிச்சைக் கூடத்தில் செய்யப்பட்ட சிகிச்சையையும் காயத்தின் தன்மையையும் மீள் நினைவிற்குக் கொண்டுவருகின்றார். நோயாளியில் ஏற்படும் மாற்றத்தையும், காயம் மாறும் தன்மையையும் கணிக்கின்றார். தொடர்ந்து கொடுக்கவேண்டிய நுண்ணுயிர் கொல்லி மருந்துகளையும், ஏற்றவேண்டிய திரவ ஊடகம் பற்றிய வந்து நிற்கின்றார். அவரின் காய இடம் பார்த்து நினைவை மீட்டுகின்றார். இவர் தமிழீழ தேசியத் துணைப்படை வீரர். எறிகணைச் சிதறல்கள் களுத்தில் காயத்தினை ஏற்படுத்தியிருந்தது. காயம் மூச்சுக் குழாயுடன் களுத்தினூடாக வெளித்தொடர்பை ஏற்படுத்தியிருந்தது. மூக்குத் துவாரத்திற்குப் பதிலாக காயத் துவாரத்தின் ஊடாக அச்சம் தரும் சத்தத்துடன் சுவாசச் செயற்பாடானது நடைபெறுகின்றது. நேரம் செல்லச்செல்ல அலர்ச்சியின் காரணமாக வீக்கம் ஏற்பட்டு படிப்படியாகச் சுவாசம் தடைப்படலாம். அவருக்கு மூச்சுக்குழாயில் ஓட்டைபோட்டு றப்பர் குழாயை உட்செலுத்தி தடையற்ற சுவாசத்தை உறுதிப்படுத்தும் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவரில் ஏற்பட்டிருந்த ஏனைய காயங்களுக்கும் கட்டுப் போடப்பட்டிருந்தது. முதற் பார்வையிலேயே அவர் உயிர் ஆபத்தைத் தாண்டியிருப்பது உறுதியாகத் தெரிந்தது. "இந்தக் குழாய்வாயை விரலால் பொத்தினால் வாயால் கதைக்கலாம்." சுட்டிக்காட்டி விளக்கப்படுத்துகின்றார். நோயாளியும் தலையாட்டுகிறார். "இவர் ஒருக்கால் அப்படிக் கதைத்தவர், தொண்டை நோகுது என்றதால் தொடர்ந்து கதைக்க முடியவில்லை" என்கிறார் விடுதி மருத்துவர். "மருந்தால் மட்டும் குணமடைய ஏலாது நல்லாச் சாப்பிடவும் வேண்டும்." என்று கூறியவாறு பராமரிப்பில் ஈடுபட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக தன்னார்வப் பணியாளரிடம் 'எப்படிச் சாப்பிடுவாரா' எனவும் கேட்கிறார். அவர் ஆம் என்பதற்கும் இல்லை என்பதற்கும் இடையாகத் தலையாட்டுகின்றார். நோயாளியின் குறிப்பேட்டில் தேவையான குறிப்புக்களை எழுதியவர் அடுத்த நோயாளியை நோக்கி நகருகின்றார்.

அப் பெண்போராளி தலைக்காயத்திற்கு உள்ளாகி இருந்தார். துப்பாக்கி ரவை ஒன்று பக்கவாட்டாய்த் துளைத்துச் சென்றிருந்தது. சுய அறிவின்றி

அப்பொழுது இவர் காதில் விடுதி மருத்துவர் கிசுகிசுக்கின்றார். "டொக்டர் இந்தப் பிள்ளை, முதல் பார்த்த ஆளின்ர தங்கச்சி" திடீரெனத் தலையில் இடியிறங்கியதாக உணர்கின்றார். காலடியில் இந்தக் கோலத்தில் சகோதரி கிடக்கின்றாள், எப்படி அண்ணனால் தொடர்ந்து பார்த்திருக்க முடியும். 'என்ர கடவுளே...' என எதேட்சையாக வாய்விட்டுக் கூறியவர் "சொந்தத் தங்கச்சியா...?" என மெதுவாகக் கேட்கின்றார். ஆமெனத் தலையாட்டியவர், "இன்னொரு தமையன் அங்க களத்தில் நிற்கிறாராம். ஒரு ஆள் தேசப்பற்றில் இயக்கத்திற்கு வர, அதைத் தொடர்ந்து மற்றவர்களும் இயக்கத்தில சேர்ந்தவையாம்." எனக் கூறிமுடிக்கிறார். "அண்ணன் ஒருக்கா தங்கச்சி என்று கூப்பிட இவளின் கண்ணிலிருந்து இருதுளிக் கண்ணீர் வந்தது. அவ்வளவுதான் பிறகு ஒரு அசைவும் இல்லை." அருகிருந்த உதவியாளர் சொல்கின்றார். தான் உறைந்து போனதாகவே சத்திரசிகிச்சை மருத்துவர் உணர்கின்றார். எச்சிலை விழுங்கித் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றார். மெல்லத் திரும்பி இருவரையும் மாறிமாறிப் பார்க்கின்றார். இவர்கள் என்ன கதைத்தார்கள் என்பதை அவ் அண்ணன் ஊகித்திருக்க வேண்டும். மருத்துவர் முகத்தை ஏக்கத்துடன் பார்க்கும் அவன் 'என்ர தங்கச்சிக்கு பிரச்சினையில்லையா?' என கண்களால் கேட்பது புரிகின்றது. தன் கண்களில் பனிக்கும் கண்ணீரை கட்டுப்படுத்தி புன்னகைத்தவாறு அடுத்த நோயாளியிடம் நகருகின்றார் மருத்துவர்.

(உண்மை நிகழ்வு)



www.eelamview.com

www.eelamview.com



# அரசியல்மயப்படுத்தப்பட்ட சிறிலங்காவின் நீதித்துறையும் அரசியல்வாதிகளாகிவிட்ட சிங்கள நீதிபதிகளும்

2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி இணைத்தலைமை நாடுகள் பிரசெல்ஸ் என்ற நகரில் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் பின்வரும் வாசகம் காணப் படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வகையில் மனித உரிமை மீறல்கள் தொடர் பாக ஆழமாக ஆராய்ந்துள்ளது. இலங்கை யைப் பொறுத்தவகையில் பாதுகாப்புப் படை யினரின் மனித உரிமைமீறல் தொடர்பாகப் புலனாய்வு செய்யப்படுவதுமில்லை மனித உரிமைகளை மீறுவோர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவதுமில்லை. குற்றஞ்சாட்டப்படு வோர் அல்லது குற்றவாளிகள் குற்றத் தீர்ப் பிலிருந்து விதிவிலக்களிக்கப்படும் கலாச் சாரம் இலங்கையில் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். "THE CULTERE OF IMPUNITY MUST STOP" என்பதே இணைத்தலைமை நாடுகளின் கருத்தாகும். இதில் IMPUNITY என்றசொல் மிகப் பிரதானமாகும். இதன் அர்த்தம் யாதெனில் குற்றத்தீர்ப்பில் இருந்து விதிவிலக்களித்து விடுதலை செய்தல் ஆகும். அதாவது "FREE FROM PUNISH - MENT" இவ்வாறானதொரு நீதித்துறையின் செயற்பாடு சர்வதேச நீதித்துறை நியமங் களுக்கு முற்றிலும் முரணானதாகும்.

உலகம் பூராகவும் நீதித்துறை அனைத்தும் பக்கச் சார்பற்றதாகவும், பாரபட்ச மற்றதாகவும் இருக்கவேண்டும் என்பதே நீதித்துறையின் மகுட வாசகமாகும். எந்தத் தலைமீடுமற்ற சுயாதீனமான நீதித்துறைச் செயற்பாடுகளே இன்று மேன்மைப்படுத்தப் படுகின்றது. யூத இன ஒழிப்பில் ஈடுபட்ட கிட்லரும் அவரது அடியாட்களும் மியூரன் பேர்க் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். இதேபோல் சிலிநாட்டு முன்னாள் தலைவர் பினாசே, யூகோஸ்லாவியாவின் முன் னாள் சர்வாதிகாரி மிலோசுவிக், லைபீரியா வின் முன்னாள் தலைவர் சாள்ஸ் டெய்லர் போர்க்காலக் குற்றங்களுக்காகவும் மனிதப் படுகொலைகளுக்காகவும் சர்வதேச நீதி மன்றங்களின் முன்னால் நிறுத்தப்பட்டது வரலாறு.

## ஈழப்போரில் யுத்தக் குற்றவாளிகள்

ஈழப்போரில் யுத்தக் குற்றவாளி களாகக் கணிப்பீடு செய்யப்பட்ட இலங்கை யின் பல இராணுவ உயர் அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தினால் கடந்த காலங் களில் வெளிநாடுகளுக்கு இலங்கையின் தூதுவர்களாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா, லெப். ஜெனரல் சிறில் ரணதுங்கா மற்றும் றொகான் தளுவத்த போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை யின் 5ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகத் தெரிவுசெய்யப் பட்டார். இதன் பின்னர் தமிழர் தாயகத்தில் படுகொலைகளும் ஆயுததாரிகளின் கொள் ளைச் சம்பவங்களும் இராணுவப் புலனாய் வாளர்களின் வெள்ளைவான் கடத்தல் சம்பவங்களும் அதிகரிக்கலாயின. மிக மோசமான மனித உரிமை மீறல்களும் தமிழர் தாயகத்தில் கடமையாற்றும் நீதிபதிகள் இத்தகைய அரச பயங்கரவாதம் காரணமாக இலங்கையின் சட்டவாக்க வரம்புகளுக்குள் நின்றோ அல்லது நீதிமன்ற நியாயாதிக்கத் துள் நின்றோ செயற்படமுடியாத நிலைமை உள்ளது. நீதித்துறையின் சட்டவாட்சிக் கோட்பாடுகள் சிதைக்கப்பட்டன. நீதித்துறை யின் சுயாதீனம் உதாசீனம் செய்யப்பட்டது. வடக்கிலும் கிழக்கிலும் பரந்துநிற்கும் இரும்புத் தொப்பிகளின் முஷ்டிக் கரங்கள் சமாதானப் புறாவின் கழுத்தை மட்டும் திருக வில்லை. நீதிதேவதையின் குரல்வளையை யும் குறிபார்க்கத் தொடங்கின. இணைத் தலைமை நாடுகள் குறிப்பிடும் IMPUNITY இங்கு ஆழவேர் பரப்பி அகல விரிவடைய லாயிற்று.

## யாழ்.மேலதிக நீதிபதி மீதான கெடுபிடிகளும் அச்சுறுத்தல்களும்

2005, டிசம்பர் மாதம் தொடக்கம் யாழ்ப்பாணக் குடாநாடு பேரினவாதப் படை களினதும் ஒட்டுக்குழுக்களினதும் தமிழினப் படுகொலைகளுக்கான ரணகளமாயிற்று. திருகோணமலையும் மட்டக்களப்பும் இதே போல முப்படைகளதும் துணைப்படைகள தும் படுகொலைக் களமானது. வடக்கிலும் கிழக்கிலும் அநியாயப் படுகொலைகள் அதிகரிக் கலாயின. இவ்வாறான படுகொலை களின் போது மரண விசாரணைக்குச் சென்ற யாழ்.மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் அவர்களிடம் சாட்சியம் அளித்த பொதுமக்கள் தமது இரத்த உறவினர்கள் பாதுகாப்புப் படையினராலும், ஈ.பி.டீ.பி ஒட்டுக்குழுவினாலும் படுகொலை செய்யப் பட்டார்கள் என்ற விபரத்தினைத் தெரிவித்தார் கள். சுற்றிவளைப்புகளின் போது தலையாட்டி கள் முன்னால் நிறுத்தப்பட்ட அப்பாவித் தமிழர்கள் எவ்வாறு கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனார்கள் என்ற விபரங்களைத் தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து அவர் இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் கைது களின்போது பாதுகாப்புப் படையினர் அந்தந் தப் பகுதிக் கிராம சேவையாளர்களையும் கூட்டிச்செல்ல வேண்டுமென்றும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படுவோர் பற்றிய விபரப்பட்டியல் ஒன்று குறித்த கிராம சேவை யாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டு மென்றும் உத்தரவைப் போட்டார். இந்த உத்தரவு பின்பற்றப்படவில்லை. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் கைதடியில் புதைகுழி ஒன்றைத் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்த கிராமசேவையாளர் ஒருவர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுப் படுகாயப்படுத்தப் பட்டார். கிராம சேவையாளர்கள் பாதுகாப்புப் படையாலும் ஒட்டுக்குழுக்களாலும் கொலைப் பயமுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார் கள். இணைத் தலைமை நாடுகள் குறிப்பிடும் IMPUNITY மேலும் தொடர்வதாயிற்று.

## கறுப்புத் துணியால் முகத்தை மூடிமறைத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீதிச் சோதனைகளிலும் இராணுவச் சோதனைச் சாவடிகளிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் சட்டத்தின் பிடியி லிருந்து தப்புவதற்காகத் தமது முகத்தைக் கறுப்புத்துணியால் மூடிக் கட்டிக்கொண்டு அப்பாவித் தமிழர்களைக் கைதுசெய்வதிலும் இம்சைப்படுத்துவதிலும் தாக்குவதிலும் ஈடுபடலாயினர். இவைபற்றி ஏராளமான முறைப்பாடுகள் பாதிக்கப்பட்ட பொது மக்களால் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டன. இவைதொடர்பாக விசாரித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள படைத்துறைத் தலைமை அதிகாரிகளை நீதிமன்றத்திற்கு வருமாறு திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்



கட்டளைகளை அனுப்பினார். ஆனால் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள படைத்துறைத் தலைமை அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு வரவில்லை. மாறாக அங்குள்ள இடைநிலை அதிகாரிகளே நீதிமன்றத்திற்கு வந்தார்கள். அவர்களிடம் கறுப்புத்துணியால் மூடிமறைக் கும் இராணுவச் சிப்பாய்கள் பற்றி நீதிபதி அவர்கள் கேள்வி எழுப்பியபோது, இனிமேல் அவ்வாறாகக் கறுப்புத்துணியால் முகத்தை மூடிக்கட்டிக்கொண்டு கடமையில் ஈடுப மாட்டார்கள் என படைத்தரப்பால் அவருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் அமுல்படுத்தப்படவில்லை. இணைத்தலைமை நாடுகள் குறிப்பிடும் IMPUNITY மேலும் தொடரலாயிற்று. அது தொடர்கதையாயிற்று.



படுகொலைசெய்யப்பட்ட தர்சினி (16.12.2005)

## ஊர்காவற்றுறை மேலதிக நீதிபதியாக...

ஊர்காவற்றுறையின் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கடற்படையின ரும் ஒட்டுக்குழுக்களுமே சட்டவிரோதச் செயற்பாடுகளிலும் குற்றவியல் குற்றங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களால் கொடுக்கப்படும் இராணுவ அழுத்தங்கள் காரணமாக கடந்த ஒருவருட காலத்தில் பல நீதிபதிகள் பல்வேறு சம்பவங்களின்போது பல இன்னல்களுக்கு உள்ளானார்கள். நிரந்தர நீதிபதி ஒருவர் நீதித்துறைச் செயற்பாடு களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக ஓய்வுபெற்றுச் சென்றார். இன்னொரு பதில் நீதிபதியொருவர் ஆயுதமுனையில் தனது கடமையைச் செய்யவிடாது தடுக்கப்பட்டார். இந்த நிலையில் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் ஊர்காவற்றுறையின் மேலதிக நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவர் பதவி ஏற்பதற்குச் சில நாட்களின் முன்பு புங்குடுதீவு இளம்பெண் இளையதம்பி தர்சினி 16.12.2005 அன்று கடற்படையினரால் பாலியல் வல்லுற வுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப் பட்டு கல்லோடு கட்டி கிணற்றினுள் போடப் பட்டார். இதுதொடர்பாக மரண விசாரணை களை மேற்கொண்ட திருமதி.ஸ்ரீநிதி நந்த சேகரன் அவர்கள் தம் முன்னால் அளிக்கப் பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலும் மருத்துவச் சான்றுகளின் அடிப்படையிலும் கொலையாளிகளால் கைவிடப்பட்டு கிணற்றடி யில் கண்டெடுக்கப்பட்ட இராணுவத் தொப்பி, சம்பாத்து அடையாளங்களையும் அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட மூன்று கடற்படைச் சிப்பாய்களையும் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு ஊர்காவற் றுறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவொன்றைப் போட்டார். பொலிசார் நடவடிக்கை எடுக்கவுமில்லை சிப்பாய் களைக் கைதுசெய்யவுமில்லை. அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ அரசினால் விதிவிலக்களிக்கப்பட்டார்கள். இணைத்தலைமை நாடுகள் குறிப்பிடுகின்ற IMPUNITY தொடரலாயிற்று. இன்னொரு அத்தியாயத்திற்குள் புகுந்தது.

## தீவகப் படுகொலைகள்

இந் நிலையில் ஹற்றனைச் சேர்ந்த ஜெயராம் றொஸ்க்கி என்பவர் ஊர்காவற்றுறை நீதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவரது காலத்தில்தான் 13.05.2006 அன்று அல்லைப் பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் இலங்கையின் கடற்படையாலும் ஒட்டுப்படையாலும் ஆறுமாதக் குழந்தை, நாலுவயதுக் குழந்தை உட்பட 12 பொது மக்கள் ஒரே இரவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். இது தொடர்பாகப் பொது மக்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இப்படுகொலையில் சம்பந்தப் பட்ட கடற்படைச் சிப்பாய்களையும் ஏனைய கொலையாளிகளையும் கைதுசெய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிபதி உத்தரவு பிறப் பித்தார். ஊர்காவற்றுறைப் பொலிசாரால் எவரும் கைதுசெய்யப்படவுமில்லை, அவர் களால் குற்றப்பத்திரங்களோ மேலதிக அறிக்கைகளோ பிரேத பரிசோதனையின் மருத்துவ சான்றுகளோ நீதிமன்றில் சமர்ப் பிக்கப்படவுமில்லை. இதனால் விசன மடைந்த நீதிபதி இவ் விடயங்களைப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கும், சட்டமா அதிபரின் கவனத்திற்கும் கொண்டு வந்தார். ஆனால் எந்தவிதமான பிரயோசன மும் இல்லை. இணைத்தலைமை நாடுகள் குறிப்பிடுகின்ற IMPUNITY தொடரலாயிற்று. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

## திருமதி நந்தசேகரன் மீது கொலைமுயற்சி

யுத்தகால சூழ்நிலையிலும் பாதிக் கப்பட்ட பொதுமக்களுக்கு மேலும் பாதிப் புக்கள் ஏற்படாத வகையில் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தனது கடமையைச் செய்து வந்தார். இந்த நிலையில் யாழ்பாணக் குடா நாட்டிற்குள் வெள்ளைவான் கும்பல்களாலும் சட்டவிரோதக் குழுக்களாலும் இராணுவச் சிப்பாய்களாலும் மேற்கொள்ளப்பட்ட படு கொலைகள், கொலைமுயற்சிகள் தொடர்பில் தமக்குக் கிடைத்த சாட்சியங்களின் அடிப் படையில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைக் கைதுசெய்வதில் மிகக் கடுமையான உத்தரவுகளை ஸ்ரீநிதி நந்தசேகரன் மேற் கொண்டார். அவரது சட்ட வரம்பிற்கு உட்பட்ட செயற்பாடுகளால் அதிருப்தி அடைந்த பாதுகாப்புப் படையினர் 08.07.2006 சனிக்கிழமை அவரது கார் மீது யாழ்ப்பாணம் பலாலிவீதி பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைக் கொலைசெய்துவிட ஒரு முயற்சியைச் செய்தார்கள். ஆனால் அது அங்கு கூடிய புத்திசாலித்தமான பொதுமக்களால் முறி யடிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பந் தப்பட்ட மூன்று சிப்பாய்கள் கைதுசெய்யப் பட்டபோதும் அவர்கள் மீது இதுவரை யாழ்ப்பாணப் பொலிசார் எந்தக் குற்றச்சாட்டுப் பத்திரமும் தாக்கல்செய்யாது இழுத்தடித்துக் கொண்டு போகின்றார்கள். இணைத் தலைமை நாடுகள் குறிப்பிப்பிடும் IMPU - NITY இங்கும் தொடர்கின்றது. இலங்கை அரசாங்கம் இவர்கள்மீது சட்டநடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை.

## ஊரடங்கு நேரத்தில் அல்லைப்பிட்டிப் படுகொலை

கடந்த 11.08.2006 யாழ்ப்பாணக் குடாநாட்டில் அசாதாரண சூழ்நிலை உரு வானது. அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று தினங்கள் 24மணிநேர ஊடரங்கு உத்தரவும் இலங்கை அரசால் பிரகடனப் படுத்தப்பட்டது. மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறாதவாறு தடுக்கப்பட்டார்கள். அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு போன்ற இடங்கள்மீது பல்குழல் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. வலிகாமம் கிழக்கு அச்செழு இராணுவமுகாமிலிருந்தும் யாழ்ப்பாண நகர 512வது படைமுகாமி லிருந்தும் ஏவப்பட்ட நீண்டதூர ஆட்லறி செல்களும், பல்குழல் எறிகணைகளும் தீவகப்பகுதி எங்கணும் செறிவாக வீழ்ந்து வெடித்தன. இதனால் அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் தேவாலயத்தில் தஞ்சம் புகுந் திருந்த மக்களும் வீடுகளில் தங்கியிருந்த

www.eelamview.com



பொதுமக்களும் எல்லாமாக நாற்பதிற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். காயப்பட்டவர்களுக்கு வைத்தியசிகிச்சை அளிக்கவோ, வைத்தியசாலைக்கு எடுத்துவரவோ முடியாதிருந்தது. ஊடரங்குச்சட்டம் மிகக்கடுமையாக இருந்தமையால் நோயாளர் காவுவண்டிகள் எடுத்துச் செல்லப்பட முடியாமல் இருந்துது. இந்நிலையில் இதைக் கேள்விப்பட்ட யாழ்.மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் தனது சொந்த வாகனத்தில் புறப்பட்டுச் சென்று யாழ்ப்பாண வைத்திய சாலைக்குச் சொந்தமான நோயாளர் காவு வண்டியை எடுத்துக்கொண்டு அல்லைப்பிட்டிக்கு 12.07.



அல்லைப்பிட்டிப் படுகொலை (13.05.2006)
(ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6மாத, 4வயதுக் குழந்தைகள் உட்பட....

2006 சனிக்கிழமை சென்று காயப்பட்டவர்களையும், இறந்த பொதுமக்கள் நான்குபேரின் உடல்களையும் எடுத்துவந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தார். இந்த விடயம் வடபகுதி இராணுவ கட்டளைப்பீடத்தினால் கொழும்பில் தங்கியிருக்கும் இராணுவத் தளபதிக்கும் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் பிரதம நீதியரசர் சரத் சில்வாவோடு தொடர்புகொண்டு இதுபற்றிப் புகார் செய்தார்கள். இதைப்பற்றி உடன் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய சரத் சில்வா யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் எந்த வித வெளிக்களச் செயற்பாடுகளிலும் ஈடுபடக் கூடாது என்றும், மரண விசாரணைகள் செய்யக்கூடாதென்றும் தனது கடமை நேரத்தில் நீதிமன்றுக்கு உள்ளேயே செயற்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார். இது நீதிபதிகளின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு இராணுவத்தாலும் நிர்வாக இயந்திரத்தாலும் விடுக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தலாகவே கருதப்படுகின்றது. உலகில் எந்தவொரு நாட்டிலும் நீதித்துறைச் சுதந்திரத்தில் இவ் வாறான தலையீடுகள் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

## மன்னார் படுகொலைகளும் நீதிபதிகளின் உத்தரவும்

இனப்படுகொலைகள் என்பது வடகிழக்கில் பரவலாக மகிந்த ராஜபக்ஷ அரசினால் விஸ்தாரம் பெற்று வருகின்றன. 09.06.2006 அன்று மன்னார் வங்காலை பஸ்திபுரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உட்பட நான்குபேர் கொடூரமாக அவர்களது தொழிற்கருவிகளால் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். இதில் அந்தப் பகுதிக் கடற்படையினரே ஈடுபட்டிருந்தார்கள் என்ற விடயம் சாட்சியங்கள் மூலம் மன்னார் மேலதிக மாவட்ட நீதிபதி திரு. பிரபாகரன் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ தினத்தன்று சம்பந்தப்பட்ட கடற்படைமுகாமில் எத்தனைபேர் தங்கியிருந்தார்கள் என்றும் அவர்கள் எந்த நேரத்தில் வெளியே சென்றார்கள் என்ற விபரத்தையும், சம்பந்தப்பட்ட படையதிகாரிக்கூடாக அறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மேலதிக நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அவை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையையும் மன்னார் பொலிசாரால் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து இன்னுமொரு கொடூர சம்பவம் மன்னார் பிராந்தியத்தில் நடைபெற்றது. 17.06.2006 அன்று பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தில் தங்கியிருந்த பொதுமக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலொன்றில் ஒரு பெண் கொல்லப்பட்டார். 54 பேர் படுகாயமடைந்தனர். இதுதொடர்பாக அந்தத் தேவாலயத்தின் பங்குத் தந்தை உட்பட பலரது சாட்சியங்களையும் பதிவு செய்த மேலதிக நீதிபதி அவர்கள், அந்தப் பகுதி கடற்படைப் பொறுப்பதிகாரியை நீதிமன்றத்திற்கு அழைத்து சம்பவ தினத்தன்று மேற்படி படைமுகாமிலிருந்து வெளியே சென்ற நான்கு கடற்படைச் சிப்பாய்களின் பெயர் விபரங்களையும் அவர்கள் சென்ற வாகன இலக்கம் போன்ற முழு விபரங்களையும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். ஆனால் நீதிமன்றின் இந்த உத்தரவை சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி மன்னார் சம்பவங்கள் தொடர்பாக தொடர்ந்து எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டாம் என்று நீதிச்சேவைகள் ஆணைக்குழுவால் மன்னார் நீதிமன்றத்திற்குத் திரைமறைவில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இணைத்தலைமை நாடுகளின் அறிக்கையில் குறிப்பிட்டபடி IMPUNITY மன்னார் மாவட்டத்திலும் விஸ்தாரம் பெற்றுள்ளமை துலாம்பரமாகின்றது.

## காணாமல்போன அல்லைப்பிட்டி வணபிதா

கடந்த 20.08.2006 அன்று ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் தேவாலயத்திற்குத் திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்காகச் சென்ற அந்தத் தேவாலயத்தின் பங்குத் தந்தை திருச்செல்வம் நிகால் ஜிம் பிறவுண் அடிகளாரும் அவரது உதவியாளர் விமலதாஸ் நிமலன் அவர்களும் காணாமல் போயினர். இந்தப் பகுதிக்கு வந்த நான்கு ஈ.பி.டீ.பியினர் இவர்கள் இருவரையும் கடுமையாகத் தாக்கிக் கடத்திச் சென்றமைக்கான சான்றுகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டன. இவைபற்றி பொதுமக்களால் யாழ்.மாவட்ட நீதிமன்றிடம் முறையிடப்பட்டன. இதனைத்தொடர்ந்து யாழ்.மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்கினராஜா அவர்களால் காரைநகர் படைத்தள முகாம் பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றுக்கு வரும்படி அறிவித்தல் விடப்பட்து. இதற்குப் பதில் கடிதம் அனுப்பிய கடற்படை அதிகாரி, தம்மால் அங்கு வரமுடியாதென்றும் நீதிபதி வேணுமென்றால் காரைநகருக்கு வருமாறும் பதில்கடிதம் அனுப்பியிருந்தார். இதேவேளை அல்லைப்பிட்டியில் 11.08.2006 அன்று இராணுவத்தின் செல்வீச்சினால் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் மரண விசாரணைக்காக அல்லைப்பிட்டி மண்கும்பான் பகுதிகளுக்குச் சென்ற ஊர்காவற்றுறைப் பதில் நீதிபதி திரு.இ.த.விக்கினராஜா அவர்களின் வாகனத்திற்கு அருகாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஆயுதமுனையில் நீதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## மூதூர் அக்சன் பாம் படுகொலைகள்

கடந்த ஓகஸ்ட் 05ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதிக்குள் நுழைந்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு பணியாற்றிய தொண்டுநிறுவனப் பணியாளர்கள் 17பேரை ஈவிரக்கமில்லாமல் சுட்டுப் படுகொலை செய்துள்ளார்கள். இதுதொடர்பாக மரண விசாரணைகளை மேற்கொண்ட மூதூர் நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா அவர்களுக்கு 05.09.2006 அன்று கொழும்பிலிருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவால் இந்த மரண விசாரணைகள் எதுவும் நடத்த வேண்டாம் என்றும் இவை அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றிற்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மாற்றத்திற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. இங்கும் இந்தப் படுகொலையில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்காக இணைத்தலைமை நாடுகள் குறிப்பிடும் IMPUNITY பின்பற்றப்படுகின்றது.

## இலங்கை உயர்நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள்

1979ஆண்டு, 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நல்லரத்தினம் சிங்கராயர் என்ற தமிழ்க் குடிமகனுக்கு இலங்கை உயர்நீதிமன்றம் 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை அளித்தது. தமக்கு விதிக்கப்பட்ட இந்தத் தண்டனைக்கு எதிராக பாதிக்கப்பட்ட நல்லரத்தினம் சிங்கராயர் ஐ.நா சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்தார். ஐ.நா சபையின் மனித உரிமைகள்குழு இலங்கை உயர் நீதிமன்றுக்கு இத் தண்டனைத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டது. இவ் வேண்டுகோளைப் பரிசீலணைக்கு எடுத்த இலங்கையின் பிரதம நீதியரசர் சரத் சில்வா தலைமையிலான நீதியரசர் குழு இலங்கை உயர்நீதிமன்றங்களுக்கு இவ்வாறானதொரு வேண்டுகோளை விடுவதற்கு எந்த அதிகாரமும் ஐ.நாவுக்கு இல்லை என்று தெரிவித்தார். இலங்கையானது ஐ.நா சபையினுடைய மனித உரிமைகள் சாசனத்தை ஏற்றுத் தாம் அதன்படி ஒழுகுவதாகக் கையொப்பம் இட்டிருக்கின்றது. இவ்வாறான சர்வதேச உடன்படிக்கையில் அரசியல்வாதிகள் கையொப்பம் இடும்போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று இலங்கையின் பிரதம நீதியரசர் மேலும் கூறியுள்ளார். இவ்வாறு ஆலோசனை கூறுவதற்கு பிரதம நீதியரசருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.



வங்காலைப் படுகொலை (09.06.2006)
(ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உட்பட....

## வடக்குக் கிழக்குப் பிரிப்பும் இலங்கை உயர்நீதிமன்றும்

1987ஆம் ஆண்டு யூலைமாதம் 29ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட ரஜீவ் காந்தி - ஜே.ஆர் உடன்படிக்கையின்படி தமிழ் மாவட்டங்களான வடக்கும் கிழக்கும் இணைந்தேயிருக்கும் என்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு பொதுசன வாக்கெடுப்பொன்றின் மூலம்தான் அந்த இணைப்புத் தொடர்பான முடிவு தீர்மானிக்கப்படுமென்றும் அந்த ஒப்பந்தம் கூறுகின்றது. ஆனால் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து மூன்று தடவைகள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் ஜே.வி.பியினர் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கவேண்டுமென்று இலங்கை உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணைகளின் போது பதில் மனுவைத் தாக்கல்செய்த தேர்தல் ஆணையாளர் தசநாயக்கா வடக்குக் கிழக்கைப் பிரிக்க இலங்கை உயர் நீதிமன்றிற்கு அதிகாரமில்லையென உயர் நீதிமன்றில் தெரிவித்தார். இந்த நிலையில் வழக்குவிசாரணை முடிவுற்றதாகக் கூறிய பிரதம நீதியரசர் சரத் சில்வா, அதனைத் தீர்ப்புக்காக நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவித்தார். நீதித்துறை சம்பந்தப்பட்ட விடயத்தில் தீர்ப்புக் கொடுப்பதற்கு இலங்கை அரசியல் அமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு எவ்வித அதிகாரமுமில்லை. மேலும் இந்த வழக்கு விசாரணையின்போது பிரதம நீதியரசர் வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பது பெரும் பாதிப்பு என்றும் கிழக்குமாகாண மக்கள் இந்த இணைப்பினால் பெரும் பாதிப்பை அடைந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார். இது, ஒரு உதைபந்தாட்டப் போட்டியில் நடுவர் ஏதோ ஒரு பக்கத்திற்குச் சார்பாகக் கோல் அடிப்பதைப் போன்றது. மேலும் பிரதம நீதியரசரின் இந்த இனவாதப்பேச்சு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான திரு.வண சுந்தரா, திரு. வல்பிற்ற, திரு.வடுகொடபிட்டிய போன்றவர்கள் சிங்களக் கொமிசன் அமைப்பில் இணைந்து பேசிய இனவாதச் செயல்களுக்கு ஒப்பானது. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் இனவாதப் போக்குகள் முழு நீதித்துறையையும் களங்கப்படுத்துகின்றன.

## சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ள சிறிலங்கா

ஐ.நா சபையின் மனித உரிமைகள் சம்பந்தமான கூட்டம் 18.09.2006அன்று இடம் பெற்றபோது அதில் உரையாற்றிய அதன் தலைவர் லூயஸ் ஆர்பௌர் சிறிலங்காவின் சட்ட ஆட்சி சீர்குலைந்து விட்டது என்றும் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளைப் பெருமளவு மீறிவருகின்றது என்றும் சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துவதில் அது தோல்வி கண்டுவிட்டதென்றும் குறிப்பிட்டார். மேலும் சிறிலங்காவில் மனித உரிமைமீறல் வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் அரசால் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இதனால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். இது இணைத்தலைமை நாடுகள் குறிப்பிட்டுள்ள IMPUNITY யைத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வாறாகப் பலகோணங்களிலும் சர்வதேச சமூகத்திற்கு முன்னால் அப்பலப்பட்டிருக்கும் சிறிலங்கா அரசு சட்டத்தின் பிரதான கோட்பாடாகிய எவரும் சட்டத்திற்கு மேம்பட்டவர்கள் அல்ல NOBODY IS ABOVE LAW என்ற சட்டக் கோட்பாட்டைப் பின்பற்றாமை காரணமாக சிறிலங்கா அரசு சர்வதேச சமூகத்திடம் இருந்து அன்னியப்படுத்தப்படுகின்ற ஒரு சூழலுக்குள் எப்படியோ தள்ளப்பட்டுவிட்டது. இனி சிறிலங்கா அரசை சர்வதேச சமூகம் முன்னர் தென்னாபிரிக்க நிறவெறி அரசை ஒதுக்கியதுபோல் சர்வதேச அமைப்புகளிலிருந்து ஒதுக்கிவைக்கும் நிலைமை உருவாகியுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் அமைப்பிலிருந்து சிறிலங்கா முதலில் வெளியேற்றப்படலாம் எனத் தெரிகின்றது.

**நேதாஜி**

03ஆம் பக்கத் தொடர்ச்சி

வேளை பாக்கில் திபெத்தில் வங்கதேசத்தில், மியன்மாரில், ஈரானில் என "வளையங்கள்" வனைந்திருக்கும் சீனா இப்போது சிறிலங்காவிலும் கூடுதல் ஈடுபாடு காட்டுகின்றது.

எனவே மகிந்தருக்குக் கிடைத்திருக்கும் அவகாசம் குறுகியது. அதற்குள்ளே மரம் தாவும் மந்திபோல மகிந்தர் பல தொங்குநிலைகளில் (சிறிய கட்சிகள் இணைப்பு, தேசிய அரசாங்க அழைப்பு, நோர்வேக்குத் தூது) செயற்பட்டுத் தமிழ்மக்களின் முதுகெலும்பை உடைக்கத் துடியாகத் துடிப்பதன் விளைவே இன்றைய நிகழ்வுகள். இற்றைவரையிலான அனைத்து அடக்குமுறைகளுக்கும் முகம் கொடுத்த எம்மினிய மக்கள் தமது தாங்கு நிலையை மீண்டும் நிரூபிப்பர். விடுதலைப் போராட்டமென்பது வெற்றி / தோல்வி என சுருக்கி வகைப்படுத்தக் கூடியதல்ல. அது எதிரியை விடவும் போராடும் சக்தியால் எத்தனை நிமிடம் கூடுதலாகத் தாக்குப்பிடிக்க முடியுமென்பதிலேயே தங்கியுள்ளது. எண்ணிப் பார்த்துவிடமுடியாத இமாலய இராணுவ வெற்றிகளையும் அமைதிக் காலத்தில் அகில உலகத்தினதும் கவனத்தையும் ஈர்த்து அம்பல மேறி அரங்காடவும் காரணமான எம் மக்கள் மீண்டும் தமது தாங்குநிலையின் ஆற்றலைக் காட்டுவர்.

"அகால மரணமாம் போரரக்கன்
விரைந்து வருகின்றான்
மானிட மகனே விழித்தெழு"

என்கிற வரலாற்றின் அழைப்பினைச் செவிமடுக்கும் எம் மக்கள், அமைதிக் காலத்திலிருந்து மீண்டும் போர்க் காலத்திற்குள் தீரமுடன் புகுந்து எமக்கான தீர்வினைப் பெறவும் அடிப்படையாக இருப்பர்.



www.eelamview.com

www.eelamview.com





உலைக்களம்

வியாசன்

# எவனுக்கு இறக்கை முளைக்கிறதோ அவனுக்கே விடுதலை எட்டும்

நெஞ்சுக்குள் அலையெற்றிய
மாயக்கனவுகள் வெளியேற
நிஜமனிதர்களாக நிற்கிறோம் இப்போது.
மினுங்கிய மின்சாரமற்று,
தொடர்புக்கிருந்த தொலைபேசியற்று,
செப்பனிடப்பட்ட தெருவற்று,
மாவற்று – சீனியற்று – மருந்தற்று
ஏனென்று கேட்க எவருமற்று
கற்காலத்துக்குத் திரும்புகிறோம் மீண்டும்.
கணினிகளையும், காஸ்சிலிண்டர்களையும்
வீட்டு மூலையில் வீசிவிட்டு
மெருகு குலையா மதில்களின் மின்குமிழ்களையும்,
விறாந்தையின் தரைவிரிப்புகளையும்,
மாடியிற் பூட்டிய அன்ரனாக்களையும்
அசுமாத்தமின்றி அகற்றிவிட்டு
பதுங்கு குழிக்குப் பால்காச்சிவிட்டோம்.
விடுவிக்கப்பட்ட ஊர்களை
விடுதலைபெற்ற தேசமென வெளிச்சம் செய்து
ஆடிய கூத்துக்கள் ஒவ்வொன்றாய் அகல
மீண்டும் நிஜத்துக்குத் திரும்பியது அரங்கு.
இப்போ மயக்கம் கலைந்த மனிதர்களைச் சுமந்து
மாரீசப் போர்வை கலைத்துக் கிடக்கிறது மண்.
இன்றைய விடிகாலையிற் துயில்நீங்கி
தாய்நிலம் வாய்திறந்து பாடும்
விடுதலைப்பாடல் பரவுகிறது வெளியெங்கும்.
மனச்சாட்சியின் கதவுகள் திறந்தபடி
எல்லோர் முகங்களிலும் அறைந்தபடி
கேட்கும் பாடலை உணரமுடிகிறதா  உன்னால்?
வார்த்தைகளிலும், வரிகளிலும் தேக்கியுள்ள
சோகத்தையும், கோபத்தையும் புரியமுடிகிறதா
ஆழமாய்?
அகாலத்திலும் ஊரெழுப்பும் அந்தக் குரலை அறிய
முதலில் நீ நெருப்பணிய வேண்டும் நெஞ்சில்.
அது விடுதலை நெருப்பு
அவியாது மேற்கிளம்பிச் சுடரவல்ல தீ.
அனல் சூடவில்லையெனில் அறியமுடியாமலும்
போகலாம்
தாய் நிலத்தின் பாடலை நீ.
போராட்டமாகத் தொடங்கிப் போராக வேகமெடுத்து
தொடர்ந்தோடும் அஞ்சலோட்டமிது
இரண்டு தலைமுறையிடம் கைமாறிவிட்டது கம்பு
எனினும் ஓடிக்கொண்டிருக்கிறோம் இலக்கடையாமல்.
தொடர்ந்தோடியும் வெற்றிக்கம்பத்தை
எம்மாலேன் தொடமுடியவில்லை?
இது எனது
இது எனக்கானதுமென்று
ஊர்திரண்டு இன்னும் சுமைதூக்கவில்லையே.
தூக்கிய தோள்களே தொடர்ந்தும் சுமக்கின்றன
புதிய தோள்கள் அதிகமாகவில்லையே.
பாரம் சுமக்காது எந்தப் பயணமும் முடிவதில்லை
ஒருதலைமுறை தன்னை அர்ப்பணிக்கும்போதுதான்
விடுதலையின் வரவு வேகமெடுக்கும்
கனவு பலிதமாகும்
நமக்கானது நமக்காகும்.

இன்றைய வியட்னாமை உழுதுபார்த்தால் தெரியும்
விடுதலைக்காய் அவர்கள் சிந்திய வியர்வையும்,
குருதியும்.
பூக்கள் ஒவ்வொன்றிலும் போராளிகளின் குருதி
புல்வெளியெங்கணும் பொதுமக்கள் வியர்வை
வயலில் உரமாக எதிராளிகள் சடலங்கள்.
பள்ளிப்பிள்ளைகளும் பாரம் சுமந்தனர்
விலைமாதர்கள் கூட அதிக விலைகொடுத்தனர்
ஊர்கூடியிழுத்த ரதபவனியே வியட்னாம் விடுதலை.
அமெரிக்கன் வீசிய குண்டுகளின் கீழே
வியட்னாமியர் அழவில்லை.
அமெரிக்கன் விசிறிய நச்சுக் காற்றினால்
அவர்கள் நடுக்கமுறவில்லை.
கூடி எழுந்தனர்
குலையுறாது நிமிர்ந்தனர்
விழுந்தவர் போக எஞ்சியோர் விடுதலையைத் தொட்டனர்.
தாயினும் பெரியது தாயகம்
வாழ்வதிலும் பெரியது வரலாற்றுக்கடன்.
தலைமுறைக்கான பணிதாங்கி நடப்பதே
மனுக்குலத்துக்குரிய மணிமகுடம்.
ஈழத்தமிழர் எவராயினும் எங்கிருப்பவராயினும்
காலக்கடமையைக் கையிலெடுப்போமெனில்
நாளை நமக்காகும்
இல்லையெனில் இழிவற்றுச் சாவோம்.
ஆட்டக்களத்தை வெல்வதற்கு
வீட்டுக்கொருவரைக் கேட்கிறது விடுதலைச்சேனை.
எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு வருக
இனிவரும் காலம் நமதென்ற நம்பிக்கையுடன்.



எதிரி வேர்களுக்கு எவரெவரோ நீர்வார்க்கின்றனர்
எங்களுக்கு நாங்கள் மட்டுமே.
பகைவாய்க்கு யார் யாரோ பால்வார்க்கின்றனர்
எங்களுக்கு எங்கள் முலைகள் மட்டுமே.
எவனுக்கு முதுகில் இறக்கை முளைக்கிறதோ
அவனுக்கே பலமதிகம்
எந்த நெருப்புள்ளும் அவன் நீந்திவருவான்
எந்தப் புயலையும் அவன் எதிர்கொண்டு
வீழ்த்துவான்
எந்த எரிமலையையும் அவன் ஊதி
அணைத்துவிடுவான்.
இறக்கை முளைத்த சாதியடா நாங்கள்
எம்மை வீழ்த்த முடியும் தற்காலிகமாக
ஆனால் எவரும் வெல்லமுடியாது.
எம்மைக் கொஞ்சநாள் அடக்கமுடியும்
எனினும் எவராலும் அழிக்கமுடியாது.
முகில் கலைய உரத்துச் சொல்லுவோம்
நாங்கள் நஞ்சுதின்னும் கூட்டம்
எவனும் எமக்குச் சாவுவிதிக்க முடியாது என்று.
உயிர்கொண்ட பிணங்களாக உலவுவதிலும்
உணர்வழியாச் சடமாக வீழ்வதே பெருமை.
வாழ்வை மாற்றியெழுதுவோமெனில்
நாளை காற்றில் நிமிரலாம்.
கரையொதுங்கிய சருகுகளாக,
காற்றிற் சரிந்த வாழைமரங்களாக,
சின்னப் பூச்சிகளாக,
விரட்டியடிக்க ஓடும் தெருநாய்களாக,
எல்லாத்திசைகளிலும் ஏதிலிகளாக,
எத்தனை காலத்துக்கென்றுதான் இழிநிலை?
முடிதரித்த வம்சம்
கொடிதரித்த கொற்றமென்று
பழைய புழுதிகள் சுவாசித்தல் விடுத்து
புதிய மனிதர்களாகப் பிறப்பெடுப்போம்.
உயிரோடு இருத்தல் மட்டுமல்ல வாழ்வு
அது திமிரோடிருத்தலும் கூட.
சங்கை பெறும் சாவும் வாழ்வாகலாம்
கல்லறையிருத்தல் காவியமாகலாம்.
பிரபாகரன் காலமென்பது நாங்கள்
தீர்மானித்ததல்ல
இது காலம் தீர்மானித்த காலம்.
இந்தக் காலமே இனி வரலாறாகப் போகிறது
இந்தக் காலமே வாசல் திறக்கப்போகிறது
காற்றின் வேகத்தைக் கணக்கிலெடுத்து
ஏற்றும் பட்டமே விண்கூவும்.
பிரபாகரன் காலமுணர்ந்தவன்
காற்றறிந்தவன்
திசைகள் பற்றிய தெளிவுள்ளவன்
வருக விடுதலைக்கொடி ஏற்றுவோம்.
வீட்டுக்கொருவர் நாட்டுக்குரியவரானால்
எம் பலத்தின் முன்னே எவன் நிற்பான்?
எம் நிலத்தில் வந்து எவன் வெல்வான்?
கூட்டாகச் சேர்ந்து குதிப்போமெனில்
பூட்டுக்கள் யாவும் பொடிப்பொடியாகும்.



www.eelamview.com